


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 9, இதழ் - 5, செப்டம்பர் - அக்டோபர் 2023



R5348

## WHAT COURSE SHOULD WE TAKE?
## எந்த மார்க்கத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

அக்டோபர் 1914 இன் நடைமுறை சம்பந்தமான மற்றும் இந்த வாழ்க்கையின் நம்பிக்கை குறித்தும் கேட்டு இரு கடிதங்களை நாங்கள் பெற்றிருக்கிறோம். எங்களுக்கு எழுதாதவர்கள் கூட இதே கருத்தை கொண்டிருப்பார்கள் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. ஆகையால் உங்கள் அனைவருக்கும் எங்களுடைய பதிலின் சுருக்கத்தை நாங்கள் கொடுக்கிறோம்.

கடிதம் எழுதிய சகோதரன், தான் ஒரு விவசாயி என்று கூறியிருக்கிறார். 1914 அக்டோபருக்கு முன் சபை கூட்டிச் சேர்க்கப்படுவதும் மகா ஆபத்தின் காலம் ஆரம்பிப்பதும் நிச்சயமானால், தனது விவசாய வேலையை விட்டு விட்டு, இந்த வருடத்தை சத்திய புத்தகம் விநியோகிக்கிற வேலையை செய்ய விரும்புவதாகவும் தனது வயலை அடமானம் வைத்தாலோ அல்லது விற்றாலோ போதுமான பணம் கிடைக்கும் என்று கூறியிருக்கிறார்.

நமது பதிலில் அந்த சகோதரனுக்கு கூறிய யோசனையாவது: அவரது ஆதரவை நம்பி ஒரு மனைவியோஅல்லது குடும்பமோ இருந்தால், இது ஒரு ஞானமான செயலே அல்ல என்று கூறுகிறோம். அவரைச் சார்ந்து யாரும் இல்லை என்றால் இது ஒரு நல்ல காரியம் என்று நினைக்கிறோம். வெறும் ஒரு வருடத்தை மட்டும் கர்த்தருடைய வேலைக்கென்று கொடுக்கிறவர் வருடம் முடியும் போது நல்ல உடல் நலத்துடன் தனது வாழ்க்கைக்காக சம்பாதிக்க தகுதியுள்ளவராக இருப்பார் என்று நம்பலாம்.

சத்திய புத்தகம் விநியோக வேலையில் கழித்த ஒரு வருடம் மற்றவர்களுக்கான ஊழியத்தில் விடாமுயற்சி மற்றும் சுய தியாகம் ஆகியவற்றில் நல்ல படிப்பும் பரிசுத்த காரியங்களை கையாளுவதில் நல்ல சிந்தனையும் கிடைத்திருக்கும் என்று நாம் நம்புகிறோம். புத்தகம் விநியோக வேலையின் திறனிலும் மற்றும் மனோபாவத்திலும் சலுகை இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். இன்னும் சிலர் அந்த வேலைக்கு தேவையான திறமையில்லாதவர்களாகவும் இன்னும் சிலர் குறைவான திறமையுடன் மற்றவர்களுக்கு சேவைச் செய்வதில் அதிகம் விருப்பம் இல்லாமல் செய்வார்கள். நாம் எதைச் செய்ய முயற்சி செய்தாலும் கர்த்தர் மெச்சும்படி, நல்ல பலன் கொடுக்கும்படி நமது சரீர பிரகாரமான மற்றும் மனம் சார்ந்த பலத்தையும் நேரத்தையும் செலவுசெய்து நமது முழு ஞானத்தையும் பயன்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களில் வழி நடத்த பரத்திலிருந்து ஞானத்தை ஒவ்வொருவரும் நாட வேண்டும்.

அடுத்தக்கடிதம் அக்டோபர் 1914 இல் சபை கூட்டிச்சேர்க்கப்பட வேண்டும் அல்லது மகா ஆபத்தின் காலம் ஆரம்பிக்க வேண்டும் என்பதை கண்டித்து, காலக்கணக்கை எதிர்க்கிற ஒரு சகோதரனை எப்படி நடத்துவது என்பதைக் குறித்த கரியம். நமது பதில் மற்ற காரியங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. இப்படி எதிர்க்கிறவர்களை நாம் விசேஷித்த விதமாக உற்சாகப்படுத்தக்கூடாது. ஏனெனில் ஒரு கெட்ட ஆவி எப்பொழுதுமே ஆட்சேபிக்கத்தக்கது. தீமை விளைவிக்கக் கூடியது. எனினும் நல்ல ஆவி ஒருவரது கருத்து வேறுபாட்டையும் அவர்களது கருத்து எதுவாக இருந்தாலும் நாம் அதை கண்டிக்கக்கூடாது. அவரிடத்தில் நாம் தீமையாக உணரக்கூடாது. அனைவரது தனிப்பட்ட உரிமையை நாம் அங்கீகரிக்க வேண்டும். பொன்னான கற்பனைக்கேற்ப ஒவ்வொருவரையும் நடந்த வேண்டும். நமது கருத்தை பிடிவாதமாக வெளிப்படுத்த நினைக்கக்கூடாது. மற்றவர்களும் தங்களது கருத்தை வெளிப்படுத்த உரிமை உண்டு என்பதை நினைக்க வேண்டும்.

### காலங்களின் அடையாளங்கள்

நமது நிலைமையும் நம்பிக்கையும் உண்மையாக இருந்தாலும், அது நமது அறிவினால் அல்ல, விசுவாசத்தினால் இருக்கிறது. சிலருக்கு விசுவாசம் என்ற காரியம் அறிவைப் போல மிகவும் பலமுள்ளதாகவும் உறுதியானதாகவும் இருக்கும். 1914 அக்டோபர் 1இல் ஏழத்தனையான புறஜாதியார் காலம் முடிவடைகிறது என்பதை கணக்கிடுவதில் நாம் தவறு செய்ததாக காணப்படவில்லை என்றாலும், காலக்கணக்கை பொருத்த மட்டில் நாம் தவறு செய்திருப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம்.

வேறு ஒரு தேதியைக் குறித்து மற்றவர்கள் சரிசமமாக நம்பினால், நமக்கு அது ஏற்படையதாக இல்லாமல் இருந்தாலும், அதனிமித்தம் அவர்களை நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களிலிருந்து நிராகரிக்கக் கூடாது. உங்களுடைய தேதியோ அல்லது எங்களது தேதியே எது சரியாக இருந்தாலும், நாம் காண்கிற அடையாளங்கள் ஆண்டவர் அருகில், வாசலில் இருக்கிறார் என்பதையும் அவரது ராஜ்யமானது கட்டுப்பாட்டை சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதையும் நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது ஒரு வருடத்திற்குள்ளேயோ அல்லது பத்து அல்லது இருபது வருடங்களுக்குள்ளேயே நாம் எதிர்ப்பார்க்கிற காரியம் நிறைவேறும். மகா ஆபத்தின் காலத்தினால் முன்னுரைக்கப்பட்டப்படி சபையானது கூட்டிச் சேர்க்கப்படும். நீதியான மேசியாவின் ஆளுகை ஆரம்பிக்கும்.

இந்த உண்மைகளைக்குறித்த வருடம் மற்றும் தேதியை காட்டிலும் பொதுவான உண்மைகள் தான் அதிக

மதிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்ததாக இருக்கின்றன. சகோதர சிநேகம் நிலைத்திருக்கடவது! ஒரு நாள் அல்லது ஒரு வருடத்தை பற்றிய வாக்குவாதம் விலையேறப்பெற்ற அன்பின் பிணைப்பை, உண்மையான அவருடையவர்களுக்கும் கர்த்தருக்கும் இடையேயான அன்பின் ஐக்கியத்தை உடைக்க அனுமதிக்க வேண்டாம். திட்டமான அறிவு இல்லாத இந்த காரியத்தைக் குறித்த விவாதத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக," தெய்வீக திட்டம், இரட்சகர் அவரது மரணத்தின் பலன் முதலானவைகளின் மீதான விசுவாசத்திற்கான சில சமயம் முறிவு அவசியமாக இருக்கிறது. இந்த காரியங்களெல்லாம் தெளிவாக வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன. காலக்கணக்கை போன்றும் காலக்கணக்கை அடிப்படையாகக் கொண்ட காரியங்களைப் போன்றும் இந்த காரியங்கள் அனுமானத்தில் விடப்படவில்லை.

### தீர்க்கதரிசனத்தின் ஒரு தெளிவான காட்சி

ஆசிரியருக்கு அதிகமதிகமாக தெளிவாகும் சத்திய அம்சங்களை காவற்கோபுர வாசகர்களுக்கு இந்த தெளிவான காட்சி அவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்படி அவ்வப்போது கொடுப்பார் என்று உறுதி கூறுகிறார். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் எதையும் மறைத்து வைக்கமாட்டார்.

மகா பாபிலோன், தேசங்கள் தங்களது நியாயத்தீர்ப்பை பெறுவதற்கு முன்னரே தனது நியாயத்தீர்ப்பை பெறும் என்று கடந்த முப்பத்து மூன்று வருடங்களாக (இந்தகட்டுரை 1913ல் எழுதப்பட்டது) காவற்கோபுரத்தில் நாங்கள் கொடுத்திருக்கிறோம். "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும்" என்கிற அறிக்கை அர்ப்பணம் செய்த சபைக்கு விசேஷமாக பொருந்துவதாக இருந்தாலும், பேர் சபைகளுக்கும் அதில் சம்பந்தம் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். எந்திரக்கல்லை சமுத்திரத்தில் எறிந்ததை போல பாபிலோனின் விழுகைக்கு பிறகு மகா ஆபத்து தேசங்களின் மேல் வெளியரங்கமாக வரும்.

எனினும், நாம் அனைவரும் மிகவும் குறிப்பாக உலகத்தின் மகா ஆபத்தின் காலத்தைக்குறித்து சிந்திக்க விருப்பமுள்ளவர்களாக இருக்கிறோம். அதை புற ஜாதியாரின காலங்கள் அல்லது வருடங்களின் முடிவாக அல்லது 1914 அக்டோபரில் அல்லது தினமும் அதற்காக கவனித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு வேளை உலக ஆபத்து வருவதற்கு முன் மகாபாபிலோன் வெளியரங்கமாக கையாளப்படும் என்ற உண்மையை ஓரளவுக்கு நாம் புறக்கணித்திருக்கிறோம். உலகத்தின் மகா ஆபத்து அக்டோபர் 1,1914 அல்லது அதற்கு முன் ஆரம்பிப்பது பற்றிய எண்ணம் கடந்த இரண்டு வாரங்களாக மிகவும் பலமாக ஆசிரியரின் சிந்தையில் வந்திருக்கிறது. இடைப்பட்ட மாதங்களில் அதிர்ச்சியூட்டும் காரியங்களை எதிர்பார்க்கலாம்.

மகா கோபத்தின் நாள் வானங்களாகிய பேர் கிறிஸ்தவ சபையில் ஆரம்பிக்கும் என்று பரிசுத்த பேதுரு விளக்குகிறார். "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்று போகும். பூதங்கள் வெந்து உருகிப்போகும். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." (2 பேதுரு 3:10) இங்கே பூமி என்பது தற்கால சமூக ஒழுங்கையும், வானங்கள் என்பது மத அமைப்பின் ஒழுங்குகளையும் குறிப்பதாக புரிந்துகொண்டு, மத அமைப்பாகிய வானங்கள் பெரும் சப்தத்துடன் மகா குழப்பத்தில், அமைதியின்மையில் அகன்று போகும் என்றும் அந்த நாளின் உக்கிரகத்தின் வெப்பத்தினாலும் போரினாலும் பூதங்கள் வெந்து உருகிப்போகும் என்றும் காண்கிறோம். பிறகு பூமி அல்லது சமூக ஒழுங்கு அந்த நாளின் சிக்கல்களில் சீர் குலையும், அராஜகத்தினால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போகும். பிறகு நாம் இன்னும் ஒரு வருடத்திற்குள் ஆபத்து ஜனங்களை பொதுவாக சென்றடையும். அதற்கு முன்னதாக தற்கால மத ஸ்தாபனங்கள் தகர்ந்து போகும் என்று தோன்றுகிறது. அவைகள் தகர்ந்து போகுமா?

### மிருகத்தின் சொரூபம்

வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரத்தை காவற்கோபுரத்தில் 1880இல் விளக்கமளித்திருக்கிறோம். மிருகம் என்பது அடையாள பாஷையில் ஒரு அரசாங்கத்தை குறிக்கிறது. பத்து கொம்புகளுள்ள மிருகம் போப்பு அரசாங்கத்தை குறிக்கிறது. அது கொஞ்ச காலம் ஐரோப்பா முழுவதையும் ஆளுகை செய்து, பிறகு ரோமாபுரி அரசாங்கத்தை ஆளுகை செய்தது. அப்படிப்பட்ட அரசியல் அதிகாரம் இப்பொழுது இல்லையென்றாலும், மேசியாவின் பிரதிநிதியாக சகல தேசங்களையும் ஆளுகின்ற உரிமையும் அதிகாரமும் இருப்பதாக கூறிக்கொள்ளுகிறது.

இரண்டு கொம்புகளுள்ள மிருகம் சபை நாடுகளாகிய கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லேண்டை குறிப்பதாக குறிப்பிட்டோம். ஏனெனில் அதுவும் கூட கிறிஸ்தவத்தையும் அரசியலையும் இணைக்கிற அரசாங்கமாக இருக்கிறது. பிஷப்புகள் பார்லிமென்டில் உட்காருகிறார்கள். ராஜா அதிகாரப்படி இங்கிலாந்து சபையின் தலைவராக இருக்கிறார். இது தீங்கிழைக்காத மத ஸ்தாபனம் என்ற அடையாள பாஷையில் நமக்கு சொல்லுகிறது. "ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளை உடையாதாயிருந்தது." தீமை செய்வது அதன் நோக்கமல்ல. ஆனால் அது வலுசர்ப்பத்தைப் போல பேசினது. வலுசர்ப்பம் முற்றிலுமாக அரசியல் அதிகாரத்தை, கிரேட் பிரிட்டனின் அரசாங்கத்தைக் குறிக்கிறது. பெயரளவில் மத சம்பந்தமானதாக இருந்தாலும் அது வலுசர்ப்பத்தைப் போல பேசினதால் முற்றிலுமாக அரசியல் அரசாங்கத்தைக் குறிக்கிறது.

"மிருகத்தின் (போப்) சொரூபம்" கிபி 1846 இல் அமைக்கப்பட்டது என்ற உண்மையை கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அந்த வருடத்தில் புரட்டஸ்டான்ட் சபைகள், குறிப்பாக அமெரிக்காவில் "இவாஞ்சலிக்கல் அலையன்ஸ்" என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இந்த கூட்டணி வெளிப்படையாக சமாதானம், நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்புக்காக ஆகும். ஆனால் உண்மையிலேயே இந்த அமைப்பின் நோக்கம் அனைத்துபல்வேறு புரட்டஸ்டன்ட் பிரிவுகளுக்கும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் கொடுக்கவும், முடிந்த வரை இவர்களை ஒதுக்கி புதிய பிரிவு உண்டாவதை தடுக்கவும் ஆகும்.

ஒரு மரபு வழி தரநிலையை ஏற்படுத்த முயற்சித்தலும், ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புக் கொடுத்தாலும், பேப்டிஸ்ட், மெதடிஸ்ட், லுத்தரன், பிரஸ்பட்டேரியன் முதலான பல்வேறு மதப்பிரிவுகளுக்கு ஆதரவு தருவதுமே இந்த கூட்டணியின் நோக்கம். போப்பு மிருகத்தின்

சொரூபத்தை போல அல்லது அரசாங்கத்தைப் போல ஒரு அதிகாரத்தை அல்லது வல்லமையை உண்டாக்க முயற்சித்தனர்; போப்பு சபை தங்களை மட்டுமே சபை என்பதும் மற்றவர்கள் எல்லாம் மதவெறி கொண்டவர்கள் என்பதும் அவர்களது வாதமாக இருந்தது என்று கண்டனர். ஆகையால் இவாஞ்சலிகல் அலையன்ஸ் அமைப்பை ஏற்படுத்தியவர்கள் தங்களது அமைப்பில் இருக்கும் அனைவரும், "மரபு வழி சபைகள் என்றும் மற்ற அனைத்துசபைகளும் மதவெறி கொண்டவைகள்" என்றும் கூற மேற்கொண்டார்கள். இந்த உணர்வில் அது ஒரு நகலாக அல்லது போப்பின் அமைப்புகளின் சொரூபமாக இருந்தது. அது அறுபது வருடமாக வல்லமை அல்லது ஜீவன் இல்லாத சொரூபமாக இருந்தது.

எனினும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிற (வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரம்) தீர்க்கதரிசனத்தில் கர்த்தர் கூறுகிறதாவது: இந்த யுக முடிவில் சொரூபம் சக்தியை, வல்லமையை, உயிரை, ஜீவனை பெறும். இனிமேல் அது சுறுசுறுப்பாக ஆகும். ஆனால் அது மிருகத்துக்கு விரோதமானது அல்ல. ஆனால் அனைவரும் மிருகத்தையோ அல்லது சொரூபத்தையோ வணங்க வேண்டும் என்ற காரணத்தினால் அனுதாபம் உடையதாக இருக்கிறது. எல்லாரும் மிருகத்துடனோ அல்லது சொரூபத்துடனோ நல்லிணக்கத்துடன் இருக்க வேண்டும். அதாவது கத்தோலிக்க சபையுடனோ அல்லது இவாஞ்சலிக்கல் அலையன்ஸில் முதன்மையான அமைப்புடனோ நல்லிணக்கத்துடன் இருக்க வேண்டும். சொரூபம் ஜீவனை பெற்ற உடனே அதன் பலன் புரட்ஸ்டன்ட் சபை கூட்டமைப்பாக இருக்கும்.

### கூட்டமைப்பை நோக்கி ஒரு முக்கியமான படி

சொரூபத்தின் உயிர்ச்சக்தி இரண்டு கொம்புள்ள மிருகத்திடமிருந்து வரவேண்டியிருக்கிறது. அதாவது இங்கிலாந்து சபை. இது முழுமையடைய முப்பது ஆண்டுகளுக்கு மேலாக காத்துக்கொண்டிருக்கிறோம். அது நெருங்கி நெருங்கி வருகிறது. சில வருடங்களுக்கு முன்னதாக எபிகோபல் சபை,சபை கூட்டமைக்கு உயிர்ச்சக்தியை கொடுப்பதற்கான ஒரு நடவடிக்கை எடுத்தது. அது அதற்கு ஆதரவாகவும் சாதகமாகவும் இருக்கிறது. அதனுடைய முக்கியமான நடவடிக்கை இவாஞ்சலிகல் அலையன்ஸை பிரதிநிதித்துவப்படுத்துகிற ஊழியர்களை அங்கீகரித்ததாகும். இதற்கு முன்னதாக கத்தோலிக்க அல்லது எபிகோபல் சபையின் பிஷப்புகள் கைகளை வைத்து நியமனம் செய்த ஊழியர்கள் பிரசங்கம் பண்ண அனுமதிக்கப்படவில்லை.

சொரூபத்தில் இந்த அங்கீகாரம் தான், சொரூபத்திற்கு தேவையான சகல உயிர்சக்தியாக இருக்கிறது. நாம் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறோம். அநேக வருடங்களாக இவாஞ்சலின் அலையன்சில் உள்ள பல்வேறு சபைகளின் ஊழியர்களுக்கு மறு நியமனம் செய்திருக்கிறார்கள. இன்னும் அவர்கள் அதை மறு நியமனம் செய்கிறார்கள். முடிவாக எபிகோபல் பிஷப்பின் கைகளின் மூலமாக மறு நியமனம் செய்வதை ஊழியர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் நிச்சயமாக கூற முடியாது. தேவையை சந்திக்க வேறொரு வழி கண்டு பிடிக்கப்படும். அதன்மூலம் எபிகோபல் சபை ஊழியர்களை மறு நியமனம் செய்வதை கட்டாயமாக்காமல் சபை கூட்டமைப்பை அங்கீகாரம் பண்ணுவது சாத்தியமாக இருக்கிறது.

வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரத்தை நாம் புரிந்து கொண்டபடி, சொரூபமானது உயிர் சக்தி பெற்றவுடன் மிகவும் சீக்கிரத்தில் அதன் செல்வாக்கை, கௌரவத்தை, வல்லமையை ஒவ்வொரு வழியிலும் பயன்படுத்தி, "வானத்திலிருந்து அக்கினியை பூமியின் மேல் இறங்கப் பண்ணும்." (வெளிப்படுத்தல் 13:13) அதாவது ஏதாவது ஒரு வகையில் தங்களுக்கு எதிரிகள் என்று கருதப்படுகிறவர்களை கர்த்தரின் பெயரால் தண்டிப்பது ஆகும். சீக்கிரத்தில் ஆவிக்குரிய வியாபார ஸ்தலத்தில் மிருகத்தின் அல்லது சொரூபத்தின் முத்திரையையோ அல்லது இலக்கத்தையோ ஒத்துழைப்பு என்கிற வலது கையிலோ அல்லது பொது பாவ அறிக்கை என்கிற நெற்றியில் பெற்றவர்கள் தவிர வேறு யாரும் வாங்கவோ அல்லது விற்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதன் பொருள் என்னவென்றால் கூட்டமைப்பில் இணையான அகில உலக வேத மாணவ ஐக்கிய சபையும் மற்றவர்களும் முற்றிலுமாக கட்டாயப்படுத்தப்படுவார்கள். சத்தியமானது தெருக்களிலே விழும். புதிய ஒழுங்குமுறையினால் நீதியானது நுழைய முடியாமற்போகும். அது கொஞ்ச காலத்திற்கு கிறிஸ்தவத்திற்கு பெரும் வெற்றி என்பது போல தோன்றும். இவைகள் போப்பு சபை, புரட்ஸ்டன்ட் கூட்டமைப்பு சமமாக பகிரப்படும். இதை ஒன்றாக சுற்றப்படுவதை, ஒருவரையொருவர் நெருங்குவதை, ஒருவருக்கொருவர் அனுதாப்படுவதை, பரஸ்பர பாதுகாப்பிற்காக ஒன்றாக சுற்றப்படுவதை நாம் முன்னரே பார்க்கிறோம்.

ஆனால் இந்த புதிய ஒழுங்கு முறையின் வெற்றி குறுகிய காலம் மட்டுமே இருக்கும். திரளான ஜனங்கள் இருண்ட யுகத்தில் இருந்ததைப் போல இனி அறியாமையில் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள். உண்மையான நிலைமையை புரிந்து கொள்ள விழித்துக்கொண்டு, நியாயத்தீர்ப்பு முன்னுரைக்கப் -பட்டபடி, கர்த்தரால் முன்னரே நிராகரிக்கப்பட்ட மகா பாபிலோன் மேல் தண்டனையை நிறைவேற்றுவார்கள். அவள் திரும்பி எழும்பாதபடி ஒரு எந்திரக்கல்லை போல கடலிலே எறியப்படுவது போல தள்ளுண்டு போவாள். கடல் என்பது மகா திரளான ஜனங்களைக் குறிக்கிறது. குறிப்பாக அமைதியற்ற எதிர்ப்பு வகுப்பாரை குறிக்கிறது. இரண்டு கொம்புள்ள மிருகம் கூட்டமைப்பில் சொரூபத்தை அங்கமாக்கியதன் மூலம் ஜீவனைக் கொடுத்தபிறகு அது தனது ஆளுகையை வெளியரங்கமாக இழக்கிறது.

### தற்கால கண்ணோட்டம்

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது: இவைகளனைத்தும் ஒரு வருடத்திற்குள் நடக்குமா? நாங்கள் ஆம், என்று பதில் கூறுகிறோம். அது சாத்தியமாகும். இரண்டாவது கேள்வி: அது அநேகமாக நிகழுமா? அது ஒரு வேளை நிகழுமா? அதற்கான பதில் இல்லை என்பதே. இவ்வளவு காரியங்கள் ஒரு வருடத்தில் நடப்பது அரிதான காரியமாக தோன்றுகிறது. இந்த காரியத்தைக் குறித்த தமது சொந்த தீர்மானத்தை ஒவ்வொருவரும் அப்பியாசப்படுத்த வேண்டும். கூட்டமைப்பின் அங்கங்களை அமைக்கிறவர்களிடையே அநேக பகுதியிலும் அதிகமான கோபம், வன்மம், பகைகள், சண்டைகள் அபிவிருத்தி அடைந்து வருகிறதை நாம் பார்க்கிறோம். இந்த அவதூறான எதிர்ப்புகள் வழக்கமாக இந்த சபை பிரிவுகளின் ஊழியர்களிடமிருந்து வருகிறது.

பச்சை மரத்துக்கு இவைகளை செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்? (லூக்கா 23:31) இவாஞ்சலிகல் அலையன்ஸ் உயிர்ச்சக்தியை

பெறுமுன்பே இப்படிப்பட்ட மத வெறியும், கசப்பான பொய்யாக்குதலும் அப்பியாசப்படுத்தப்பட்டு, பகைகள் வெளிப்படுத்தப்பட்டால், சொரூபமானது உயிர்ச்சக்தியை பெற்ற பிறகு அதே நபர்கள் எவ்வளவு திமிர் பிடித்தவர்களாக ஆவார்கள்? எவ்வளவு சீக்கிரத்தில் தொந்திரவு செய்யும் வெறுப்பின் ஆவி அபிவிருத்தி அடைகிறது?

நாம் இந்த காரியத்தை தெளிவுபடுத்துவோம். பல நூற்றாண்டுகளாக வழி வழியாக வந்த தப்பறையான கருத்து ரோம சபை மற்றும் இங்கிலாந்து சபையின் பிஷப்புகள், "அப்போஸ்தல பிஷப்புகள்" அல்லது அப்போஸ்தலரின் வாரிசுகள் என்பதாகும். இந்த கொள்கையின்படி இந்த "அப்போஸ்தல பிஷப்புகள்" தங்கள் கைகளை வைத்து அனுமதி தரவில்லை என்றால் இந்த பூமியில் யாருக்கும் போதிக்கவோ அல்லது அறிவிக்கவோ உரிமை இல்லை என்பதாகும்.

இந்த ஒழுங்கின்படி மெதடிஸ்ட், பேப்டிஸ்ட், லூத்தரன், பிரஸ்பட்டேரியன் இப்படிப்பட்டவர்கள் அதிகாரம் இல்லாமல் போதிக்கிறார்கள். நியமனத்தைப் பற்றி பேசும் போது, அவர்கள் தங்களது சொந்த ஊழியர்களை தங்கள் பிரிவில் ஏற்படுத்துவதை அர்த்தப்படுத்துகிறார்கள். கூட்டமைப்பு இந்த சங்கடத்தை நீக்கி, ஒவ்வொரு சபை பிரிவும் மற்றவர்களது நியமனத்தை அங்கீகரிக்க முயற்சி செய்கிறார்கள். கூட்டமைப்பு இந்த பொதுவான மரபு வழி மதக் கோட்பாட்டை இந்த அங்கீகாரத்தின் மூலமாக கட்டுகிறார்கள். ஏதாவது ஒரு முறையில் ஜீவனை, உயிர்ச்சத்தை, சக்தியை, கௌரவத்தை பெற்று இங்கிலாந்து சபை, தங்களது ஊழியர்களை ஏற்படுத்தி அதை அங்கீகாரம் செய்வார்கள்.

சுவிசேஷத்தை போதிக்கவும் கற்பிக்கவும் ஒரு சாலையை ஏற்படுத்துவார்கள் என்று உறுதிப்படுத்துகிறோம். அவர்களது அங்கீகாரமும் நியமனமும் இல்லாமல் போதிக்க ஒரு குறுகலான வழியை அனைவருக்காகவும் ஏற்படுத்துவார்கள். மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கவும் மிருகத்தின் முத்திரையை நெற்றியிலோ அல்லது கையிலோ பெறவும், மறுக்கிற அனைவருக்கும் நமக்கும் இது சோதனை காலமாக இருக்கும். (வெளிப்படுத்தல் 13:15-17)

## ஒருவருக்கொருவர் நமது அணுகுமுறை

நாங்கள் இப்பொழுது ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறோம். இந்த காரியங்களையெல்லாம் ஒரு வருடத்திற்குள் நிறைவேற இயலாததாகவோ, கஷ்டமானதாகவோ இருந்தால், இந்த காரியங்கள் எல்லாம் ஒரு வருடத்திற்குள் நடக்காது என்று உறுதியாக உணருகிற மற்றும் காலக்கணக்கில் குறை இருக்கிறது என்று நினைக்கிற சகோதரர்களிடத்தில் நாம் கனிவாகவும் பொறுமையுடன் நடந்து கொள்ளவும் உணரவும் வேண்டும். "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது." "தீமையை வெறுத்து, நன்மையை பற்றிக்கொள்ளுங்கள்." இந்த சில அனுபவங்கள், அடுத்த சில மாதங்களில் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவதில் ஏமாற்றம் இருந்தாலும், நமது அனைத்து அனுபவங்களும் நன்மைக்கு ஏதுவாக இருக்கும்படி தேவனுடைய கிருபை நம்மை வழிநடத்த, நம்மை ஆசீர்வதிக்க நம்மோடு கூட இப்படியாக இருக்கும்.

எபிகோபல் சபையானது, அவர்களது அங்கங்களில் ஒருவர் தலைமை பிஷப் ஆக இருக்க, இங்கிலாந்து சபையின் ஆர்ச் பிஷப் அலுவலகத்தில் இருப்பது போல, சபை சட்டத்தில் ஒரு தீர்மானத்தை சபை மாநாட்டில் நிறைவேற்றியிருக்கிறார்கள். தெளிவான விவாதத்திற்கு பிறகு தங்கள் "பணி மன்றம்" (Mission Board) மற்ற கிறிஸ்தவ பணி மன்றங்களுடன் ஒத்துழைப்புக் கொடுக்க அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். சில பிஷப்புகள் தங்களது "குருத்துவ உறுதி மொழியை" மீறுவதாக இருக்கும் என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால் அது மறுக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது, முன்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் மற்ற புரட்டஸ்டன்ட் சபைகளுடன் இந்த ஒத்துழைப்பு இணைந்து, எபிகோபல் சபையின் அழைப்புடன் புரட்டஸ்டன்ட் சபை ஊழியர்கள் பங்குபெற அனுமதிக்கப்படுகிறார்கள். இது சபை கூட்டமைப்பு அல்லது இவாஞ்சலிக்கல் அலையன்ஸின் அங்கீகரமாகும். இன்னும் எவ்வளவு அதிகமான உயிர்ச்சத்து சொரூபத்திற்குதேவைப்படும் என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

"புறஜாதியார் காலம்" முடிவடைவதற்கோ அல்லது வேறு எந்த குறிப்பிட்ட காரியம் நடைபெறவோ 1914 அக்டோபர் நிச்சயமான தேதி என்று அக்டோபர் 15ஆம் தேதியின் இதழில் நாங்கள் கூறவேயில்லை. இதைப்பற்றி ஒரு வாசகர் தனது கேள்வியில் கூறியிருந்தார். வேதாகம பாடங்கள் தொகுப்பில் தொகுதி எண் 2இல் கொடுக்கப்பட்டுள்ளதை கீழே தருகிறோம். "புறஜாதியார் காலமானது 2520 வருடங்கள் கொண்டது என்றும் அது கிபி 1914ஆம் வருடம் முடிவடைகிறது என்பதையும் நிரூபிப்பதற்கு முன்பு, அது கிமு 606இல் ஆரம்பித்தது என்று நாம் முதலில் கண்டு பிடித்ததை இப்போது நினைவில் வைக்க வேண்டும்...... புறஜாதியாரின் காலத்தைப் பற்றிய இந்த வேதாகம ஆதாரங்கள் எல்லாம் ஒரு நிர்ணயிக்கப்பட்ட சத்தியமாக நாம் கருதுகிறோம். இவ்வுலக ராஜ்யத்தின் முடிவும் தேவனின் ராஜ்யம் பூரணமாக இவ்வுலகத்தில் ஏற்படுதலும் சமீப காலத்தில் கிபி 1914இன் முடிவிலே ஏற்படும்."

1914ஐப் பற்றி நாங்கள் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளில், இந்த மேற்கோள்களில் தவறானது எதுவும் இல்லை என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த அறிக்கைகளிலும் இன்னும் நமது மற்ற அறிக்கைகளிலும் நமது வாசகர்களுக்கு நமது கருத்தையும் வேதவாக்கியங்களைக் குறித்த நமது விவாதத்தையும் அறிவித்துள்ளோம். அதை அவர்களது கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். இதனால் வாசகர்களை சிந்தித்து அவர்களே தீர்மானிக்கவும், அதை ஏற்றுக்கொள்ளுவதும் அதை மறுப்பதும் உண்மைகளைப் பற்றிய அவர்களது தீர்மானத்தின்படி இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்களில், எந்த அதிகாரப் பூர்வமான அறிக்கையையும் கொடுக்கவில்லை என்பதை கவனிக்கவும். வாசகர் தனது சொந்த அறிவை பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார். உதாரணத்திற்கு வார்த்தைகளைக் கவனிக்கவும்: "மனதில் வைக்கவும்;" "ஆதாரங்களை ஆராய முற்படும் போது;" "வேத ஆதாரம்." ஆசிரியர் வாசகர்களுக்கு முன் வைத்த ஆதாரங்களைக் கொண்டே அவர் சத்தியத்தை நிலை நாட்டுவதாக தனது கடைசி வாக்கியத்தில் எல்லாவற்றையும் சேர்த்து கூறுகிறார்.

இதைப் பொருத்தவரை காவற்கோபுரம் முன்னிலைப் படுத்துகிறவைகள் மற்றவைகளைக் காட்டிலும் மாறானவை என்று இது குறித்து நாங்கள் நம்புகிறோம். ஆசிரியரின் கருத்தையும் அதற்கான காரணங்களையும் நாங்கள் நேர்மறையாக கூறுகிறோம். ஆனால் மேலும் எதையும் முயற்சிக்காமல் எல்லா காரியத்தைக் குறித்தும் முடிவான தீர்மானத்தை ஒவ்வொரு தலை மற்றும் இருதயத்திற்கு விட்டு விடுகிறோம்.

**R5350**

## ELECTING ELDERS AND DEACONS

# மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

சபை கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றவர்கள் முழுமையாக அர்ப்பணம் செய்து, அதை அடையாளப்படுத்தியிருக்கிற ஒப்புரவாகுதலின் விசுவாசிகள் மட்டுமே என்று ஆசிரியர் சமீபத்தில் அறிவித்த போது ஒரு சிறு தவறு நடந்து விட்டது. அந்தத் தவறு அடையாளப்படுத்துதல் என்ற வார்த்தையை சேர்த்ததேயாகும். தண்ணீர் முழுக்காட்டுதலின் உண்மையான சிறப்பையும் முக்கியத்துவத்தையும் காணும் முன்பு நம்மில் அநேகர் உண்மையான கிறிஸ்தவர்களாகவும், "உண்மையாக கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையின்" (எபிரேயர் 12:23) அங்கத்தினர்களாவும் இருந்தோம். இப்படிப்பட்டவர்கள் சபையில் தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்றிருக்கின்றனர் என்று நாம் எப்பொழுதும் கருதுகிறோம். (வேதாகம பாடங்கள், தொகுதி 6ஐப் பார்க்கவும்) ஆம், வாக்களிப்பது அவர்களது கடமை. அவர்களது தீர்மானத்தின்படி, சபையின் ஊழியர்களின் விஷயத்திலும் கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துவது அவர்களது கடமையாக இருக்கிறது.

ஆனால் நாங்கள் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், தனது அர்ப்பணத்தை முறையாக அடையாளப்படுத்துகிறது பற்றிய வேதாகம போதனைகளை இன்னும் ஏற்றுக்கொள்ளாத எந்த சகோதரனும் மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ முறைப்படி நியமிக்கப்பட தேவையான வளர்ச்சி அடைந்திருக்க மாட்டார் என்பதேயாகும். கவனக்குறைவினாலேயே இப்படிப்பட்டவர் வாக்களிக்கக்கூடாது என்ற கருத்தை சேர்த்துவிட்டோம்.

சபை தேர்தலுக்கு முன் மொழிதலில் சில சபைகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஒரு சகோதரனுடைய தகுதியை சரியாக கவனிக்காமல் அவரை ஒரு மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ முன் மொழியப்படுகிறது. அது வழி மொழியவும் படுகிறது. முழு சபையும் அந்த சகோதரன் மேல் உள்ள அன்பாலும் அவருக்கு எதிராக வாக்களிக்க மனமில்லாமல் இருக்கின்றனர்.

சபையில் எந்த ஊழியத்திற்கும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். மூப்பரானவர் போதிக்க வல்லவராகவும், பெருந்தன்மை உடையவராகவும், தேவையானவர்களுக்கு ஆலோசனை கொடுக்க முடிந்தவராகவும், தேவனுடைய வார்த்தைகளை ஆழமாக ஆராய்கிறவராகவும் சபையில் செல்வாக்கு உடையவராகவும் ஞானமான ஆலோசகராகவும் இருக்க வேண்டும். இந்த நற்குணங்கள் யாவற்றையும் ஒருவர் சரிசமமாக பெற்றிருக்க இயலாது. ஒருவர் ஒரு குணத்தை அதிகமாகவும் மற்றொருவர் வேறொரு குணத்தை அதிகமாகவும் பெற்றிருக்கலாம். ஆனால் அனைவரும் அவைகளில் சிலவற்றையாகிலும் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் அவரது தேர்வில் எந்தவித சாக்கு போக்கும் இருக்காது. இதேபோல ஒரு உதவிக்காரர் ஊழியம் செய்ய நேரம் ஒதுக்க முடிகிறவராகவும், வருங்காலத்தில் மூப்பராவதற்கு ஏதுவான சில தகுதிகள் உடையவராகவும் சபைக்கு ஊழியம் செய்ய விருப்பம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை முன்மொழியும் காரியத்தில் ஏதாவது சிரமம் இருக்குமானால், பெரும்பாலானவர்கள் விரும்பினால், வாக்குச்சீட்டு முறைமையை பின்பற்றுவது ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. இதை செயல்படுத்த காகித பென்சிலும் துண்டு காகிதங்களும் தேவைப்படும். வாக்களிப்பவர்கள் பின்வருமாறு எழுத வேண்டும். "நான்.......... சபையில் கீழ்கண்ட மூப்பர்களை ......... மாதங்களுக்கு இருக்கும்படி முன் மொழிகிறேன்." கீழே பெயர்கள் எழுதப்பட வேண்டும். சபையார் எண்ணிக்கையை கூட்டவோ குறைக்கவோ விரும்பினால் முன்மொழிதலுக்கு பிறகு தேர்தல் சமயத்தில் அதைச் செய்யலாம்.

வாக்குச்சீட்டு சேகரிக்கப்பட்ட பிறகு முடிவுகள் பட்டியலிட்டு சபையில் வெளிப்படையாக அறிவிக்கப்படவேண்டும். அதன்பிறகு சபையானது எத்தனை மூப்பர் வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். மூன்று பேர் தேவை என்று தீர்மானிக்கப்பட்டால், அதிகமாக முன் மொழிதல் உள்ள ஆறுபேர் தேர்தலில் நிற்க அனுமதிக்கப்பட்டு, கைகளை நீட்டுவதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற மூன்று பேர் சபையாரால் தேர்ந்தெடுக்கபட்டதாக கருதப்பட வேண்டும். இன்னொரு முறை என்னவென்றால் வாக்கு செலுத்தினவர்களில் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமாக முன் மொழியப் பெற்றவர்கள் அனைவரையும் முடிந்தமட்டில் ஏகமனதாக தேர்ந்தெடுப்பதாகும். இந்த ஏற்பாடு சிறுபான்மையானவர்கள் கூட மூப்பர் பதவிக்கு வருவதற்கு சந்தர்ப்பமளிப்பதாகும்.

எப்பொழுதும் மனதில் நிறுத்தப்பட வேண்டிய கருத்து என்னவென்றால், சபையின் தீர்மானம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். பெரும்பான்மையானவர்கள் ஆளுகை செய்தாலும் மூப்பர்கள் சிறுபான்மையானவர்களுக்கு சில விஷயங்களில் இணங்குவது முழு சபையின் உணர்வுகளும் பிரதிபலிப்பதாக இருக்கும். பலனை எப்படி அடைவோம் என்பது முக்கியமல்ல, நாம் ஞானமாக செய்வோம். வேறே முடிவை பெற்றால் அது ஞானமற்றதாகவும் சபையின் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கு ஆபத்து உண்டாக்குவதாக காணப்படும். சகோதர அன்பு எப்பொழுதும் அனுதாபம், இரக்கம், அன்பு மற்றும் முக்கியமான கொள்கை இல்லாத பட்சத்தில் விட்டுக்கொடுத்து செல்வதாக இருக்கும்.

## THE SIN OF COVETOUSNESS

# பொருளாசையாகிய பாவம்

யோசுவா 7

“உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்.”– எண்ணாகமம் 32:23

இஸ்ரயேலர்கள் முழு விசுவாசத்துடனும் எரிகோவின் வெற்றியுடனும் கானானை ஜெயங்கொள்ளும்படி தொடர்ந்தார்கள். வேவுக்காரர்கள் ஆயி பட்டணத்திற்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் திரும்பி வந்து இடம் சிறியதாக இருந்ததால் அதைப்பிடிக்க இரண்டு அல்லது மூன்று ஆயிரம் பேர் போதும் என்று கூறினார்கள். உண்மையிலேயே எரிகோவின் அனுபவத்தால், இஸ்ரயேலர் யாரும் கொல்லப்பட மாட்டார்கள் என்று எதிர்பார்த்தார்கள். மேலும் அவர்களது எதிரிகள் திகில் பிடித்து இருந்ததால் அதிகம் எதிர்ப்பு இருக்காது என்றும் எதிர்பார்த்தனர். ஆனால் ஆயியின் அனுபவம் தலைகீழாக இருந்தது. இஸ்ரயேலர்கள் முப்பத்து ஆறு பேர் கொல்லப்பட்டனர். இஸ்ரயேலின் சேனை கர்த்தரின் தயவு இல்லை என்பதை உணர்ந்து சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போனார்கள்.

யோசுவாவும் அவரது கூட்டாளிகளுமான இஸ்ரயேலின் மூப்பர்களும் இதனிமித்தம் கலக்கமடைந்தார்கள். கஷ்டத்திற்காக துக்கித்து, எதிரிகள் தோல்வியடைய வேண்டியிருக்க, அதற்கு மாறாக எதிரிகளை உற்சாகப்படுத்தி தேவனுடைய விசேஷித்த ஜனங்கள் உற்சாகம் கெடுக்கப்பட்ட துக்கத்தினால் பயந்து அவர்கள் உடன்படிக்கை பெட்டியின் முன்னால் முகங்குப்புற விழுந்தார்கள்.

### சாபத்தீடானவைகள் அல்லது அர்ப்பணிப்பானவைகள்

நமது பொதுவான மொழி பெயர்ப்பிலும் அர்ப்பணிப்பானவை என்பதற்கு பதிலாக சாபத்தீடானவை என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களது துரோகத்தினால் இஸ்ரலேயர்கள் தேவ கிருபையை இழந்தார்கள் என்று கர்த்தர் யோசுவாவிடம் கூறினார். எரிகோ பிடிக்கப்பட்ட போது இஸ்ரயேல் வீரர்களில் ஒருவன் கொள்ளைப் பொருட்களில் ஒன்றை எடுத்துக்கொண்டான். கர்த்தருடைய ஏற்பாட்டின்படி கொள்ளைப் பொருட்கள் எல்லாம் முன்னரே அர்ப்பணிக்கப்பட்டவைகள். ஆகையால் இது அவர்களது உடன்படிக்கையை மீறின செயலாக இருந்தது. இந்த காரியம் நிவர்த்திப்பண்ணப்படும் வரை இஸ்ரயேலரின் சேனை ஆசீர்வாதத்தை பெறாது.

ஜனங்கள் அனைவரும் பாடத்தை கற்றுக்கொள்ளும் படியாக, குற்றம் செய்த கோத்திரத்தை கண்டுபிடிக்கும்படி அனைத்து கோத்திர பிரதிநிதிகளையும் அவருக்கு முன்பு கூடி சீட்டு போடும்படி கர்த்தர் கட்டளையிட்டார். இதே விதத்தில் அனைத்து குடும்பமும் சோதிக்கப்பட்டு தவறிழைத்த குடும்பம் கண்டு பிடிக்கப்பட்டது. இப்படியாக படிப்படியாக காரியம் ஆகான் மேல் வந்தது. பிரச்சனைக்கு காரணவாளியாக, குற்றவாளியாக குறிக்கப்பட்டான்.

“யோசுவா, ஆகானை நோக்கி: மகனே, நீ இப்போது இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்து, அவருக்கு முன்பாக அறிக்கை பண்ணி, நீ செய்ததை எனக்குச் சொல்லு; அதை எனக்கு ஒளிக்காதே என்றான். அப்பொழுது ஆகான் யோசுவாவுக்கு பிரதியுத்தரமாக: மெய்யாகவே நான் இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன். இன்னின்ன பிரகாரமாக செய்தேன். கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும் ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன். இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைந்திருக்கிறது. வெள்ளி அதன் அடியிலிருக்கிறது என்றான்.”

### ஆகான் மீது தண்டனை

கல்லெறியுண்டு மரிப்பதே ஆகானின் மீதான தண்டனையாக இருந்தது. கல்லெறிந்து அவைகளை அக்கினியினால் சுட்டெரித்தார்கள். எரித்தல் எதிர்கால நம்பிக்கை அவனுக்கு இல்லாததைக் குறித்தது. எனினும் இயேசுவின் மரணத்தினால் அளிக்கப்பட்ட இரட்சிப்பில் மனுக்குலத்தில் மற்ற அனைவருக்கும் கிடைக்கும் பங்கு ஆதாமின் குடும்பத்தின் அங்கமாக ஆகானுக்கும் கிடைக்கும் என்றும் இது ஒரு உருவகமாக இருந்தது என்றும் நாம் கருதுகிறோம். இப்படியாகத்தான் சோதோமியர்கள் வானத்திலிருந்து வந்த அக்கினியால் அழிக்கப்பட்டார்கள். அது இரண்டாம் மரணத்தில் மரிக்கும் வகுப்பாரை உருவகமாக குறித்தது. ஆனால் ஆதாமிய மரணமாகிய முதல் மரணத்திலிருந்து விடுதலையடையாமல் யாரும் இரண்டாம் மரணத்திற்கு செல்ல முடியாது. இவைகள், தெரிந்தே தீமை செய்த வகுப்பாரை ஒரு நிழலாக முன்னடையாளமாக காண்பிக்கின்றன. இவர்கள் புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல நித்திய அழிவில் கெட்டழிந்து போவார்கள்.

சோதோமியர்களைப் போல ஆகானும் இயேசுவின் மூலம் ஆசீர்வாதத்தையோ அறிவையோ அனுபவிக்கவில்லை. மேசியாவின் யுகத்தில் சோதோமியர்களைப் போல இயேசுவின் பலியின் புண்ணியத்தினால் மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு மீட்படைவார்கள். அவர்களது அனுபவம் கோராசீன் மற்றும் பெத்சாயிதாவின் அனுபவங்களைக் காட்டிலும் மிகவும் தாங்கக்கூடியதாக இருக்கும். அதே போல் ஆகானுக்கும் இருக்கும். அப்போஸ்தலர்கள் அறிவிப்பது போல, கடந்த கால இந்த நிழலான அனுபவங்கள் அழிவுக்கு ஒரு உதாரணமாக வைக்கப்பட்டிருந்தன. அறிந்தே, தெரிந்தே அறிவுடன் கர்த்தருடைய வழிகளை நிராகரிக்கிற அனைவருக்கும் இதுவே முடிவான தண்டனையாக இருக்கும். (1கொரிந்தியர் 10:11; யூதா 7)

### நமது நாளில் பொருளாசை

உலக சரித்திரத்திலேயே நமது நாட்களைப் போல பொருளாசையுள்ள காலம் இருந்ததில்லை. ஆகான் செய்ததிலிருந்து மிகவும் வித்தியாசமாக செய்பவர்கள் எந்த தேசத்திலும் எந்த நகரத்திலும் சிலர் இருப்பார்கள். இப்படிப்பட்ட அனைவரும் கல்லெறியுண்டு எரிக்கப்பட்டால் உலகமானது ஒரு பெரிய ஈமச்சடங்கு சிதையாக இருக்கும் உண்மைதான். பயத்தினால் இப்படிப்பட்ட தண்டனை அவர்களால் தடுக்கப்படவில்லை. எனினும் அதில் பெரும்பாலானோர் இப்படிப்பட்ட பாவங்களுக்கு நித்திய ஆக்கினையே தண்டனை என்று நம்புகிறார்கள். ஆம், ஆகானின் கல்லெறிதலில் யோசுவாவையும் இஸ்ரயேலர்களையும் கண்டனம் செய்ய தயாராயிருக்கிற

அநேகர், அன்பின் சகல கிருபைகளின் தேவன், சகல இரக்கங்களின் பிதா இரட்சகருடன் உயர்ந்த உறவுக்குள் வந்திருக்கிற சகல பரிசுத்தவான்களைத் தவிர்த்து மற்ற முழு மனித குடும்பங்களுக்கும் ஆகானைக் காட்டிலும் பத்து மடங்கு மோசமானவைகளைச் செய்வார் என்று நம்ப தயாராயிருக்கிறார்கள்.

ஐயோ, நமது சிந்தை எந்தஅளவுக்கு திரிக்கப்பட்டிருக்கின்றன வேதாகமத்தின் போதனைகள் என்று தவறாக எண்ணிக்கொண்டிருந்தவைகளையும், இருண்ட காலத்திலிருந்து நமக்கு கொடுக்கப்பட்டு வந்த தப்பறையான போதனைகளையும், பிசாசுகளின் தவறுகளையும் ஓரளவுக்கு நீக்கி, உண்மையான வெளிச்சம் இப்பொழுது பிரகாசித்துக் கொண்டிருக்கிறதற்காக நாம் எவ்வளவு சந்தோஷப்படுகிறோம்!

## அர்ப்பணம் செய்தவர்களிடத்தில் பொருளாசை

யோர்தான் அர்ப்பணத்தை குறிக்கிறது என்பதையும், யோர்தானைக் கடந்தவர்கள் நிழலாக, தேவனுடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்களை குறிப்பிடுகிறார்கள் என்பதையும், கானானின் வெற்றிகள் அர்ப்பணம் செய்தவர்களுக்கு இருதய கோட்டையின் சிந்தைக்கு அடிபணிதலுக்குமான ஆவிக்குரிய போராட்டத்தையும் நாம் நினைவு கூரும் போது ஆகானின் பாவம் ஒரு வலிமையையும் அர்த்தத்தையும் பெறுகிறது. அது அனனியா மற்றும் சப்பீராளின் பாவத்திற்கு மிகவும் நெருக்கமாக ஒத்தாக இருந்தது. அவர்கள் தங்கள் சொத்துக்களை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணித்திருந்தார்கள். பிறகு அர்ப்பணிக்கப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை திரும்பவும் எடுத்துக்கொள்ள முயற்சித்தார்கள். அவர்கள் தேவனிடமிருந்து திருடினார்கள். அவர்கள் தேவனிடம் கொடுத்திருந்ததை திரும்ப திருடுபவர்கள். இந்த வகுப்பார் விசேஷமாக ஆகானை குறிப்பிட்டார்கள். அவன் திருடினான் சகோதரர்களிடமிருந்து அல்ல. கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தவைகளை, கர்த்தரிடமிருந்து திருடினான்.

கிறிஸ்தவன் என்ற பெயர் இன்றைக்கு ஒரு மிகவும் பரந்த பிரயோகத்தை பெற்றிருக்கிறது. அது இன்னும் பொதுவாக நாகரீகம் அடைந்த மனிதனைக் குறிக்கிறது. ஆனால் கிறிஸ்தவன் என்ற வார்த்தை மனுக்குலத்தின் சிறு வகுப்பாரையே சேர்ந்ததாக இருக்கிறது. அவர்கள் இயேசுவை விசுவாசித்து, அவரது சீஷர்களாக அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவர்களாக இருக்கும்படி தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள். "ஒருவன் எனக்கு சீஷனாயிருக்க விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்" என்கிற நிபந்தனையை ஏற்றுக்கொண்டவர்கள். மெய்யான கானானுக்குள் நுழைந்த இந்த வகுப்பார் இஸ்ரயேலர்களால் நிழலாக காண்பிக்கப்பட்டார்கள். இவர்கள் நல்ல போராட்டத்தை போராடி, தங்களது போரில் கிடைத்த கொள்ளைப் பொருட்களெல்லாம் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவைகள் என்று அங்கீகரிப்பவர்கள்.

தங்களது சொந்த உண்மைத்தன்மையையும் விசுவாசத்தையும் குறித்து விசாரிக்கிறவர்களுக்கானது அது. கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கையில் ஒரு பகுதியை நான் எனக்கென்று எடுத்துக்கொண்டிருக்கிறேனா? என்று அவர்கள் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும். கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டதில் எதாவது ஒரு பாகத்தை தங்களுக்கென்று வைத்துக்கொண்டால் அவர்கள் மெய்யான ஆகானாக இருக்கும் ஆபத்தில் இருக்கிறார்கள். அவர்கள் சபையிலுள்ள மற்றவர்கள் மேல் தீமையான செல்வாக்கை அப்பியாசப்படுத்துகிற ஆபத்தில் இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, ஆகான் விஷயத்தில் அடையாளமாக விளக்கப்பட்ட ஆபத்தில், முற்றிலுமாக அழிந்து போகக்கூடிய இரண்டாம் மரணத்தில், நித்திய அழிவின் ஆபத்தில் இருக்கிறார்கள்.

## விக்கிரகாராதனையான பொருளாசை

பொருளாசை என்பது விக்கிரகாராதனை என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். முதலாவது அது மிகவும் விரும்பக்கூடிய ஒன்றை வைக்கிறது. இந்த விரும்பக்கூடிய பொருள் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாக இருந்தால், அது தேவனைக்காட்டிலும் மதிப்புக்குரியதாக இருப்பதாக குறிக்கும். அது தேவனுடைய கிருபையைக் காட்டிலும் அதிகமாக விரும்பப்பட்டதாக இருக்கிறது. இந்த கருத்தின்படி பார்த்தால் முழு உலகமும் இன்றைக்கு முழுமையான விக்கிரகாராதனையில் இருக்கிறது. செல்வமும் சந்தோஷமும் மிகவும் ஆராதிக்கக்கூடிய விக்கிரகங்களாக இருக்கின்றன. இவைகள் ஒவ்வொருவருடைய நேரத்தையும் கவனத்தையும் எடுத்துக்கொள்ளுகின்றன. நேரம், பலம், கௌரவம், மனிததன்மை, பெண்மை எல்லாம் இந்த "விக்கிரகங்களில்" ஆடம்பரமாக ஊற்றப்படுகிறது. மாறாக, எந்த நல்ல ஈவுகளுக்கும் காரணராகிய மெய்யான தேவன், அவரது சிருஷ்டிளின் திரளானவர்களிடமிருந்து மிகவும் குறைவான கனத்தையே பெறுகிறார். அவரது பிரமாணங்கள், அவரது சித்தம், அவரது பிரியம் மற்றும் அவரது கிருபை அனைத்தும் அரிதாக சிந்திக்கப்படுகின்றன.

அதன் பலன் என்ன? உலகப்பொருளை ஆராதிப்பது மனுக்குலத்தின் இருதயங்களில் உண்மையான சந்தோஷத்தையும் அல்லது சமாதானத்தையும், திருப்தியையும் கொடுக்கிறதா? சந்தோஷத்தையும் தேடுவதும் அதற்கான நேரத்தையும் திறமையையும் பணத்தையும் அர்ப்பணிப்பதும் திரளான ஜனங்களுக்கு ஆத்தும சந்தோஷத்தையும் கொடுத்ததா? இந்த கேள்விக்கு இல்லை என்றே பதில் கூறப்படும். செல்வமானது பின்தொடரப்பட்டு எல்லா வகையிலும் பூஜிக்கப்படுகிறது. அது சிலருக்கு மட்டுமே தயவு செய்கிறது. அதன் தயவை பெற்றவர்கள் கூட இனிப்புடன் கசப்பையும் பெறுகிறார்கள். அவர்கள் நம்பிக்கை கொண்டு விசுவாசித்தபடி செல்வமானது சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டு வரவில்லை. அது கவலையை, குழப்பத்தை, இன்னும் அதிகமான பட்டினியை கொண்டு வந்தது. அதை எப்படி ஈடுகட்டுவது என்பதை அறியாதிருக்கிறார்கள்.

சந்தோஷத்தை தொடர்ந்து தேடுவதும் ஆராதிப்பதும் இப்படியாக இருக்கிறது. சந்தோஷத்தை தேடுவதும் அதை தொடர்ந்து செய்வதும் எப்பொழுதும் தொடர்கிற காரியமாக இருக்கிறது. அதை கிரகித்தல் என்பது சந்தோஷமானதாக இராமல், அதிருப்தியையும் இருதய பசியையும் கொண்டு வருவதாக இருக்கிறது. அதன் பலனால் உலகப்பொருளையும் சந்தோஷத்தையும் ஆராதிப்பவர்கள் வருத்தத்துடனே இருக்கிறார்கள். உலகமானது அதிருப்தியில் இருந்து நாட்கள்

செல்லச்செல்ல இன்னும் அதிகமாக அதில் வெளியரங்கமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

மனிதனானவன், அதிகமான திருப்தி, களிப்பு, சமாதானம், இளைப்பாறுதல் மற்றும் சந்தோஷத்தை கொடுக்கக்கூடிய அவனது உயர்ந்த, நேர்த்தியான உணர்வுகள் எல்லாம் அவனது மனதின் பயிற்சி மற்றும் தேவனுக்கடுத்த திறமைகளினாலும் பெறும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறான். பரிசுத்த பவுலின் கூற்றுப்படி, மனிதர்கள் அனைவரும் சுபாவப்படி தேவனைப் பற்றிய உணர்வுகளும் அவரைக் காணும்படியாக விருப்பத்தையும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஐயோ, "தேவனை நேசி, எல்லாரையும் நேசி" என்பதின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தின் அறிவின் மூலம் இளைப்பாறுதல் மற்றும் சமாதானத்தை கண்டிருக்கிற தேவனுடைய ஜனங்களில் உயர்ந்தவர்களில் அநேகர், உண்மையான தேவனை காண உலகிற்கு உதவி செய்யாமல் இருப்பது மாத்திரமல்ல. மாறாக அவர்களை தவறாக வழி நடத்துகிறார்கள்.

இருண்ட யுகங்களில் நாம் பெற்ற கொடூரமாக தவறாக சித்தரிக்கப்பட்டவைகளை நாம் இருதய பூர்வமாக நிராகரித்திருக்கிறோம். தெய்வீக குணலட்சணம் மற்றும் திட்டத்தை தவறாக சித்தரித்தலை இன்னமும் நாம் உலகிற்கு முன்பாக பிடித்துக்கொண்டு, இப்படி செய்வதின் மூலம் அவர்களை தேவனிடமிருந்தும் வேதாகமத்திலிருந்தும் திருப்பி, உலகப்பொருளை ஆராதித்து சந்தோஷத்தை தேடுவதில் ஆத்துமாவுக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தேடுகிறார்கள். அது ஏமாற்றத்தையே கொண்டு வரும். தேவன் அன்பாயிருக்கிறார் மற்றும் இயேசு மூலமாக அனைவரும் மீட்கப்பட்டு இளைப்பாறுதலுக்குள் நுழையக்கூடிய ஒரு கிருபையான திட்டத்தை அவர் பெற்றிருக்கிறார் என்கிற வேதாகம போதனைகளை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நமது விசுவாச பிரமாணத்தின் கொடூரமான போதனைகளை நாங்கள் நிராகரித்திருக்கிறோம் என்பதை எவ்வளவு காலம் நாம் உலகிற்கு வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவோம்!

**R5351**

## THE LOGOS MADE FLESH
# லோகோஸ் மாம்சமானது

யோவான் 1:1-18

"வார்த்தை மாம்சமாகி. நமக்குள்ளே வாசம் பண்ணினார்."– வசனம் 14

முழு வேதாகமத்திலும் நமது கிறிஸ்துமஸ் பாடம் மிகவும் அழகான ஒன்றாக இருக்கிறது. ஆதியாகமம் பூமிக்குரிய பொருட்களின் ஆதிக்கு கொண்டு செல்கிறது. ஆனால் இந்த பாடம், தேவன் தனியாக இருந்த போதிருந்த சகல ஆதிகளுக்கும் ஆதிக்கு கொண்டு செல்கிறது. தெய்வீக கிரியைகளின் ஆரம்பமே லோகாஸ் தான். "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதி." "சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்." (வெளிப்படுத்தின விசேஷம் 3:14; கொலோசேயர் 1:15)

லோகோஸ் என்பது வாய்க்கருவி அல்லது விசேஷித்த தூதரைக் குறிக்கும். அது மாத்திரமல்ல, அவர் நமக்கு அறிவித்தது போல, லோகோஸ் ஆதியாக அல்லது அல்பாவாக மட்டுமல்ல, தெய்வீக சிருஷ்டிப்புக்கு அந்தமாக. ஒமெகாவாகவும் இருந்தார். (வெளி. 1:11; 21:6) யேகோவாவின் முதற்பேறானவரும் ஒரே பேறான குமாரனுமானவருக்கு ஒரு பிரத்தியேகமான இடம் கொடுக்கப்பட்டது. அதனால் "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல் -லாமல் உண்டாகவில்லை." (வசனம் 3) இப்படியாக பிதாவானவர், சகல சிருஷ்டிப்பின் வேலையிலும், தூதர்கள், கேருபீன்கள் மற்றும் மனிதர்களின் சிருஷ்டிப்பின் வேலையிலும் அவரை தமது பிரதிநிதியாக கனப்படுத்தினார்.

கிரேக்க மூலவாக்கியம் முழுமையாக நமது பொதுவான மொழி பெயர்ப்பில் குறிப்பிடப்படவில்லை. துல்லியமான மொழிபெயர்ப்பில் இவ்விதமாக இருக்கிறது. "லோகோஸ் தேவனுடன் இருந்தார். ஒரு தேவனாகவும் இருந்தார்; அவரே ஆதியில் தேவனோடிருந்தார்." இங்கே நமது இரட்சகர் மனித நிலைமைக்கு முன்பிருந்த நிலைமையின் மாட்சிமை முழுமையாக வைக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் குமாரனாக, பிதாவாக அல்ல, ஒரு தேவனாக, தேவனாக அல்ல என்று தெளிவாக காண்பிக்கப்பட்டிருக்கிறார்.

தேவன் என்ற வார்த்தை வல்லமையுள்ளவர் என்பதை குறிக்கிறது. ஆனால் ஒரே ஒரு தேவனே இருக்கிறார். அவரது நாமம் சர்வ வல்லமையுள்ளவர். பரிசுத்த பவுல் இதை உறுதிப்படுத்தி கூறுகிறதாவது: "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." (1கொரிந்தியர் 8:6) அப்போஸ்தலர் மறுபடியும் எழுதுகிறதாவது: "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான். கிறிஸ்துவுக்கு தேவன் தலையாய் இருக்கிறார்." (1 கொரிந்தியர் 11:3) இயேசு அவருக்காகவே உண்டாக்கப்பட்டார். அவர் யேகோவாவோ அல்லது பிதாவாகவோ இல்லை என்று கோரப்படுகிறது. ஆனால் தேவனுடைய குமாரனாக இருந்தார். அவர் பரலோகத்திலிருக்கிற அவரது பிதாவின் சித்தத்தை செய்ய வந்தார்.

திரித்துவம் என்று சொல்லப்படுகிற போதனை கிபி325 இல் நிசேயா விசுவாச பிரமாணத்தில் கான்ஸ்டன்டைன் ராஜாவால் சேர்க்கப்பட்டது. நாம் வேதத்தை ஆராயும் போது ஏற்படுகிற குழப்பத்திற்கு இதுவே காரணமாக இருக்கிறது. திரித்துவம் என்ற வார்த்தையே வேதாகமத்தில் இல்லை. சேர்க்கப்பட வசனமாக வேத பண்டிதர்களால் அங்கீகரிக்கப்பட்ட 1யோவான் 5:7ஐத் தவிர வேறு எந்த ஆதார வசனமும்வேதாகமத்தில் இல்லை. இந்த வசனம் பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் காணப்படவில்லை.

"என் தேவனே! என் தேவனே!" என்று பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் இரட்சகர் பிதாவனவரிடம் ஜெபித்த போது அவர் வஞ்சகம் பண்ணவில்லை." நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனித்திற்கும் நான்

இன்னும் ஏறிப்போகவில்லை'' என்று அவர் உயிர்த்தெழுந்த பிறகு அவர் மரியாளிடம் கூறியது வஞ்சகமானதாக இருக்கவில்லை. பிதாவோடு அவர் ஒன்றாக இருப்பதையும் அவரது சீஷர்களிடையேயும் இதே ஒன்றாயிருத்தல், ஆவியிலும் நோக்கத்திலும் ஒன்றாயிருத்தல் இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஆகையால் அவரது சபைக்காக அவர் ஜெபித்தாவது: "அவர்களுக்கெல்லாம் ஒன்றாயிருக்கவும், நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.'' (யோவான் 17:21-23)

### "லோகோஸ் மாம்சமானது"

ஆவிக்குரிய தளத்தில் ஐசுவரியவானாக இருந்த அவர் பாவம் மற்றும் மரணத்தினால் இருளடைந்திருக்கிற இந்த உலகத்திற்காக, பரலோக சுகங்களை விட்டு நம் நிமித்தம் தரித்திரரானார் என்று எப்படி பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். (2 கொரிந்தியர் 8:9) நமது பாடமும் அப்படியே நமக்கு கூறுகிறது. (வசனம் 14) "அந்த லோகோஸ் மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவரது மகிமை பிதாவுக்கு ஒரே பேரானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாக இருந்தது.'' நமது கர்த்தர் தமது உயர்ந்த நிலைமையிலிருந்து தாழ்த்தி, அடிமையின் ரூபமெடுத்து, ஆபிரகாமின் வித்தாக மனுஷ சாயலானார் என்று அறிவித்து பரிசுத்த பவுலும் இதை உறுதிப்படுத்துகிறார். (பிலிப்பியர் 2:7,8; எபிரேயர் 2:16)ஆனால் அவர் பாவமுள்ள மனிதனாக வந்தார் என்று தவறாக நினைக்கக்கூடாது. அவர் "பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்'' என்று உறுதிகூறப்படுகிறோம். (எபிரேயர் 7:26) அவரது சரீரம்,நமது இனத்திலிருந்து வித்தியாசமாகவும், தனிப்பட்டவராகவும் தயார் பண்ணப்பட்டது. நமது இனத்தில் அனைவரும் பாவத்தினாலும் மரண வித்தினாலும் கறைபட்ட ஆதாமின் சந்ததியாக இருக்கிறார்கள். (எபிரேயர் 10:5-9)

ஆனால் இன்னொரு வகையில், லோகோஸ் ஆவியின் ஜீவியாக இருந்துகொண்டு வெறும் மாம்ச சரீரத்தை எடுத்துக்கொண்டு அல்லது மனித உருவில் தோன்றினார் என்ற கருத்திலிருந்து நாமே நம்மை காத்துக்கொள்ள வேண்டும். அவதாரம் எடுத்தல் என்ற இந்த கருத்தை வேதவாக்கியங்களுக்கு மாறான இந்த கருத்தை அநேகர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தேவதூதர்கள்அவதாரம் எடுத்தார்கள் அல்லது மாம்சத்தில் தோன்றினார்கள் என்று பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் விளக்குவது போல அவ்வப்போது மாம்சீக சரீரத்தை எடுத்துக்கொண்டார்கள். நமது கர்த்தரே கூட அவதாரம் எடுத்து, மாம்சத்தில் ஆபிரகாமுக்கு மற்றவர்களுடன் தோன்றினார்; ஆபிரகாமிடம் பேசினார்; ஆனால் ஆபிரகாமோ தான் பரலோக ஜீவிகளிடம் பேசுகிறதை அறியாமல் மனித பயணிகள் என்று தவறாக நினைத்தார்.

இதே போல இயேசு அவரது உயிர்த்தெழுதலுக்கு பிறகு பலவிதமான மாம்சீக சரீரங்களில் தோன்றினார். அதாவது அவரது சீஷர்களுக்கு குறிப்பிட்ட பாடங்களை போதிக்கும் நோக்கத்திற்காக அவர் மாம்சீகத்தை எடுத்துக்கொண்டார் அல்லது அவதாரம் எடுத்தார். ஏனெனில் அவர் மாம்சமாவதற்கு முன்பு இருந்தது போல, உயிர்த்தெழுதலுக்கு பின்பு அவர் ஒரு ஆவியின் ஜீவியாக இருந்தார். அவர் ஆவியின் ஜீவியாக இருந்து கதவுகள் மூடியிருக்கும் போது அவர் தோன்றினார், மறைந்தார். இப்படியாக அவர் இரு பாடங்களை தமது சீஷர்களுக்கும் போதித்தார்:

1. இனி அவர் மரித்தவர் அல்ல, உயிர்த்தெழுந்தவர்

2. இனி அவர் மாம்சீக ஜீவியல்ல, ஆவியின் ஜீவி

"மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.''(1பேதுரு 3:18)

நாம் வேத மாணாக்கர்களாக கற்றுக்கொண்டதை தேவனுடைய வார்த்தைக்கு மிகவும் இசைவாக செய்யும்படி நாம் முயற்சிக்க வேண்டும். ஆதாம் பூரண மனிதனாக இருந்து பாவம் செய்து, மரண தண்டனை கொடுக்கப்பட்டதால், தெய்வீக பிரமாணத்தின் கீழ் ஒரு பூரண மனிதனின் பலியினால் மட்டுமே மீட்கப்பட முடியும். நியாயப்பிரமாணம் கூறுகிறதாவது: "கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், மனித ஜீவனுக்கு மனித ஜீவன்.'' ஆகையால் காளை, வெள்ளாட்டுக்கடா, ஆதாமின் பாவத்திற்கு பாவ நிவாரணம் செய்ய இயலாது. ஏனெனில் அவைகள் சமமானதல்ல. காளையோ அல்லது வெள்ளாடோ பாவம் செய்யவில்லை, அதை மீட்பதற்கு, ஆனால் பாவம் செய்தது ஒரு பூரண மனிதன்.

மானிட குடும்பத்தில் உள்ள அனைவரும் ஆதாமின் பிள்ளைகளாகவும் ஆதாமின் மரண தண்டனையில் பங்குடையவர்களாகவும் இருப்பதால், "எந்த ஒரு மனுஷனும் தன் மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்க இயலாது.'' (சங்கீதம் 49:8) ஆதாமுக்கும் அவரது இனத்தாருக்கும் சார்பாக தானே முன்வந்து மரிக்க விரும்புகிற ஒரு பூரண மனிதனை கண்டுபிடித்தால் ஒழிய அவர்கள் மீட்கப்பட முடியாது என்று தேவன் விஷயத்தை மூடிவிட்டார். அப்படிப்பட்ட மனிதன் இல்லாததால், தேவன் தமது ஒரே பேறான குமாரனாகிய லோகோஸை மனிதனாகும்படியும், ஆதாமுக்கும் அவரது சகல பிள்ளைகளுக்கும் இரட்சகராகும்படியும் ஏற்பாடு செய்தார்.

ஆனால் லோகோஸ் இதை கோரிக்கையாக வைத்திருக்க மாட்டார். பரிசுத்த பவுல் குறிப்பிடுவது போல, பரலோக பிதாவானவர் ஒரு மாபெரும் திட்டத்தை அவரது குமாரன், லோகோஸ் முன் வைத்தார். அதாவது அவர் மனிதனின் மீட்பராகி தமது விசுவாசத்தையும் உண்மைத்தன்மையையும் மெய்ப்பித்து காண்பித்தால், அவரை எல்லாவற்றிற்கும், அதாவது தூதர்கள் மற்றும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தி தெய்வீக சுபாவத்தில் பங்குபெறும்படி செய்வார் என்று கூறினார். (எபிரேயர் 12:2; பிலிப்பியர் 2:5-11) லோகோஸ் முழு விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுடன் திட்டத்திற்குள் நுழைந்தார்; அவர் மாம்சமாக தனது ஜீவனை அர்ப்பணம் செய்து எதையும் வைக்காமல் கல்வாரியில் கிரியை முடித்தார். அவர் பிதாவானவரால் மரித்தோரிலிருந்து பரலோக சுபாவத்திற்கும், கனம், மகிமைக்கும் உயிர்த்தெழுப்பப்பட்டார்.

### "உலகத்தின் ஒளி"

லோகோஸ் இயேசுவாக்கப்பட்டார். எனினும் மாம்சத்தில் இயேசுவின் கிரியை தெய்வீக திட்டத்தின் முடிவல்ல. அது ஆரம்பம் மட்டுமே. சபை மற்றும் உலகத்தின் எதிர்கால சகல ஆசீர்வாதங்களுக்கும் அவரது மரணம் அடிப்படையாக அமைந்தது. பிதாவானவரின் திட்டப்படி, கிறிஸ்துவின் சபையாக, அவரது மணவாட்டியாக அவரது

சிங்காசனம், மகிமை மற்றும் கிரியையில் பங்குபெறும்படி ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார் இஸ்ரயேலரிடமிருந்தும் ஒவ்வொரு ஜாதியிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்பட வேண்டும்.

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நிறைவடைந்த பிறகு, “உம்முடைய ராஜ்யம் வருவதாக” என்று நாம் ஜெபிக்கிற ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். சாத்தான் கட்டப்பட வேண்டும்; தீமை முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்; ஒவ்வொரு நல்ல செல்வாக்கும் அறிவொளியும் பிரகாசிக்க வேண்டும். இந்த உலகத்திற்காக மரித்தவர் இப்படியாக இந்த உலகத்தின் ஒளியாக வேண்டும். அவர் இன்னும் உலகத்திற்கு ஒளியாகவில்லை. அவருடைய ஜனங்களுக்காக மட்டுமே ஒளியாகியிருக்கிறார். பரிசுத்த யோவான் அறிவிப்பது போல, அவரது வெளிச்சம் இருளில் பிரகாசித்தது. ஆனால் இருளானது அதை பற்றிக்கொள்ளவில்லை. அதே போல அவரது அர்ப்பணிக்கப்பட்ட சபையினால் உயர்த்தப்பட்ட சத்திய வெளிச்சம் உணரப்படவில்லை. அந்த அளவுக்கு இன்னும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிற உலகத்தாரின் உள்ளம் இருளின் அதிபதியின் சக்தியினால் வசீகரிக்கப்பட்டிருக்கிறது. (1யோவான் 5:19)

ஆனால் ஜீவாதிபதியும் அவரது ராஜ்யமும், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி தேவனுடைய மகிமையின் அறிவின் வெளிச்சத்தினால் நிறைந்திருக்கப் பண்ணுவார். (ஆபகூக் 2:14) இதனால் ஒருவனும் தனது சகோதரனை நோக்கி, கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் அவரை அறிந்திருப்பார்கள். (எரேமியா 31:34) இப்படியாக அவரது வாக்குத்தத்தின்படி முடிவாக இயேசுவே “உலகத்தில் வந்து எந்த மனிதனையும் பிரகாசிக்கிற மெய்யான ஒளியாக இருப்பார்.” (யோவான் 1:9) மனுக்குலத்தின் திரளானவர்கள், இலட்சக்கணக்கான புறஜாதியினும் நாகரீகமடைந்த ஜாதியில் திரளானோர்களும் இந்த மெய்யான ஒளியை பார்த்ததோ கேள்விப்பட்டதோ இல்லை.

சபை மகிமையடையவும் அதன் கர்த்தரின் உடன் சுதந்திரராகவும் நீதிமான்களின் உயிர்த்தெழுதல் அவசியமாயிருக்கும். சகல மனுக்குலத்தையும் உள்ளடக்கிய அநீதிமான்களின் உயிர்த்தெழுதல், தேவன் தன் குமாரனில் அருளிச் செய்திருக்கிறதும் அவரது ஆயிர வருட யுகத்தில் வீசும் மெய்யான ஒளியைக் காண்பதற்காக இருக்கும். இருளை விரும்பி ஒளியை நிராகரிக்கிறவர்கள் மட்டுமே இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

### “பிள்ளைகளாகும் அதிகாரம்”

யோவான் ஸ்நானன் அந்த ஒளியைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தவராயிருந்தார். ஆனால் அவர் அந்த ஒளியல்ல. “நீங்கள் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறீர்கள்” என்று இயேசு கூறின சபை வகுப்பாரும் அவரில்லை. ஏனெனில் கர்த்தரின் பலிக்குப் பிறகு பரிசுத்த ஆவியினால் பிறக்கக்கூடிய காலத்தில் யோவான் ஸ்நானன் ஜீவிக்கவில்லை.

இந்த லோகோஸிலிருந்து மாம்சமாக்கப்பட்ட மகா பெரியவரை உலகமானது அங்கீகரிக்கவில்லை, அவரது சொந்த ஜாதியே அவரை அங்கீகரிக்கவில்லை. ஆனால் சிலுவையிலறைந்தார்கள். எனினும் சிலர் அவரை ஏற்றுக்கொண்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரமும் உரிமையும், சுதந்தரமும் சலுகையும் கொடுத்தார். அப்படிப்பட்ட சலுகை யூதர்களுக்கோ அல்லது விழுந்துபோன இனத்தில் யாருக்குமே பெந்தெகொஸ்தே வரை கொடுக்கப்படவில்லை. இயேசு தேவனிடத்தில் பிரசன்னமாகி நமது பாவங்களுக்காக பாவ நிவாரணம் செய்த பிறகே கொடுக்கப்பட்டது.

இந்த பிள்ளைகளெல்லாம் பரிசுத்த ஆவியினால் பிறந்தவர்கள். அவர்களுடைய மாம்சீக குமாரத்துவம் அல்ல. அவர்களது ஆவிக்குரிய பிறப்பு உயிர்த்தெழுதலின் மாற்றம். அப்பொழுது அவர்கள் தங்களது ஆண்டவரைப் போல ஆக்கப்பட்டு அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசித்து அவரது மகிமையில் பங்கு பெறுவார்கள்.

**R5353**

## “MARRIGE IS HONOURABLE”
## “விவாகம் கனமுள்ளது”

யார் என்ன சொன்னாலும் செய்தாலும் கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவரும் வேதாகமத்தினால் தேவனுடைய வார்த்தையின் ஆவியினாலும் எழுத்தினாலும் அவருடைய தீர்மானத்தில் வழி நடத்தப்பட வேண்டும். அது அறிவிப்பதாவது: “விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப்படாததாயும் இருப்பதாக.” (எபிரேயர் 13:4) திருமணம் ஆகாமலிருந்து, கர்த்தருடைய ஜனங்கள் தங்களை தெய்வீக ஊழியத்திற்கு முற்றிலுமாக அர்ப்பணித்து, தங்களது பலியை சந்தேகத்திற்கிடமில்லாமல் சந்தோஷத்துடன் நிறைவேற்ற முடியும் என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். விவாதத்திற்கான காரணத்தை அவர் கூறுகிறார். ஆனால் திருமணம் பரிசுத்தமானது அல்ல என்றோ புனிதமற்றது என்றோ அல்லது தேவனுடைய பிரமாணத்துக்கு எதிரானது என்றோ கூறவில்லை. திருமணம் ஆன புருஷன் தன் மனைவிக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று கவலைப்படுகிறான் என்றும் மனைவியானவள் தன் புருஷனுக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று கவலைப்படுகிறான் என்று மட்டும் அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.

இப்படியாக திருமணமான நிலைமை, தனிப்பட்டவர் சரீரப்பிரகாரமாகவும் ஆவியின் பிரகாரமாகவும் தேவனுக்கு ஊழியம் செய்யும் தனிப்பட்ட நோக்கத்தை ஏறக்குறைய எடுத்துப்போடும். (1கொரிந்தியர் 7:32-35) தனியாக இருப்பது அல்லது பிரம்மச்சாரியாக இருப்பது சபைக்கு அனுகூலமாக இருக்கும் என்று பரிசுத்த பவுல் ஞாபகப்படுத்துகிறார். ஒரு துணையை பெற்று ஆவிக்குரிய கடமை மற்றும் பொறுப்புகளை செய்ய

அவசியத்தில் இருப்பதைக் காட்டிலும் மாபெரும் ஊழியத்தை அவரால் நிறைவேற்ற முடிந்தது என்று கூறுகிறார்.

இதை ஏன் நாம் குறிப்பிடுகிறோம் என்றால், சில சமயங்களில் திருமணம் ஆகாதவர்களுக்கு சகோதரர்களோ. சகோதரிகளோ ஆலோசனைக் கூறும் போது எழுதப்பட்டதற்கு மேலாக போகிறார்கள். கர்த்தர் அறிவிக்காத சுமைகளை அவர்கள் மேல் வைக்கிறார்கள். அதாவது திருமணம் செய்தால் பரம அழைப்பை இழக்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட மார்க்கத்தின் நல்ல நோக்கங்கள் ஒருவனை நீதிமானாக்க முடியாது.

மேலும் சமீபத்தில், ஒரு கைக்குழந்தையை உடைய ஒரு பிரியமான ஜோடிகளைக் குறித்து நாங்கள் கேள்விப்பட்டோம். நாம் எதிர்ப்பாக்கிற பெரிய மாற்றத்தின் காரணமாக ஒரு தாயாக இருப்பது ஒரு அவமானத்திற்குரியது என்று சில சகோதரிகள் கூறியதைக் கேட்டு அந்த தாயானாள் மிகவும் அதிர்ச்சிக்குள்ளானாள்.

அந்த அன்பான சகோதரிகள் தவறு செய்தார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் தங்கள் மார்க்கத்தை குறித்து யோசிக்கவும், கர்த்தருடைய சித்தம் என்று அவர்களது சிறந்த தீர்மானத்தின்படி தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் உரிமை உண்டு. இந்த காரியத்தில் ஒரு மாறுபாடான கருத்தைக் கூறி மற்றவர்களை கண்டனம் பண்ண அவர்களுக்கு உரிமையில்லை. அவனது சொந்த எஜமானனிடம் ஒவ்வொரு வேலைக்காரனும் நிற்பான் அல்லது விழுந்து போவான். வேதாகமமானது தாய்மையைக் குறித்தோ தந்தையை குறித்தோ, முற்றிலும் மாறுபாடாகவோ சுயமரியாதையாகவோ பேசவில்லை.

அப்போஸ்தலர் கூறுவது போல, சில கர்த்தருடைய பிள்ளைகள் பிரம்மச்சாரிய வாழ்க்கை வாழ்வதற்கு ஒருவருக்கொருவர் ஒத்துக்கொண்டு வாழ்வது அவர்களைப் பற்றிய சொந்த விஷயம். தேவனுடைய ஊழியத்தில் அதிகமான சந்தர்ப்பம், சக்தி மற்றும் பொருட்கள் கிடைப்பதற்கு தங்களை கர்த்தருக்காக, கர்த்தரினிமித்தம் அன்னகர்களாக (திருநங்கையாக) ஆக்கிக்கொண்டால். அது தங்கள் விருப்பப்படி அவர்களது பலியாக இருக்கும். அவர்கள் கர்த்தரிடம் நல்ல பரிசை எதிர்ப்பார்ப்பார்கள். இதுதான் அவர்களது தீர்மானமாக இருந்தால், அவர்கள் பரிசளிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் சமமான தீர்மானத்தை, அவர்கள் சரியானபடி சிந்தித்தால், நம்மிடமிருந்து கண்டனத்தை பெறாமல் எதிரான முடிவை எடுக்கலாம். உண்மையிலேயே அவர்களது சமூக உரிமைகள், சலுகைகளில் தலையிட நமக்கு கொஞ்சம் கூட உரிமையில்லை என்பதை உணர வேண்டும்.

நாம் சகோதரர்களோடும் உலகத்தோடும் தொடர்பு கொள்ளுவதற்கு பொன்னான பிரமாணம் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. அவர்கள் நம்மிடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அதையே நாம் பிறருக்குச் செய்ய வேண்டும். நமக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது என்று நினைக்கிறோமோ. அதே சுதந்தரத்தை நாம் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

நமது வாசகர்களில் சிலர் வேதாகம பாடங்களில் தொகுப்பு 6இல் பாடம் 12க்கு போதுமான கவனம் கொடுக்கவில்லையே என்று நாம் கவலைப்படுகிறோம். இந்த பாடம் இந்த காரியத்தைக் குறித்து விபரமாக ஆராய்கிறது.

**R5353**

## "CHOOSE YE THIS DAY"

## "இந்த நாளை தெரிந்து கொள்ளுங்கள்"

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். "– யோவான் 3:16

வருட கணக்கை முடிப்பதும் புது வருட கணக்கை ஆரம்பிப்பதும் சரக்கு பட்டியல், புத்தகம் இருப்பு கணக்கு, இலாப நஷ்ட கணக்கு மற்றும் எதிர்கால அனுகூலமான கொள்கைளை தீர்மானித்தல் போன்றவைகளுக்கு உகந்த காலமாக இருக்கிறது. பூமிக்குரிய காரியங்களில் இப்படியாக நாம் விவேகமாக இருந்து, மேலான (ஆவிக்குரிய) காரியங்களில் அக்கறையில்லாமல் இருந்தால் அது வருத்தத்திற்குரியதும் பரிதபிக்கப்படத் தக்கதுமாக இருக்கும். இயேசுவும் பங்குதாரராகவும் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் இருந்தால் ஒழிய, இந்த வருட முடிவில் மிகவும் திருப்திகரமான வரவு செலவு கணக்குகளை எந்த ஆத்துமாவும் கொடுக்க இயலாது என்று நாம் பாதுகாப்பாக கூறலாம். வருட முடிவில் ஒவ்வொருவரும் தனது காரியங்களின் நிலைமையில் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் களைப்படைவர்களாகவும், கனத்த இருதயத்துடனும் குழப்பத்துடனும் அதைரியத்துடனும் காணப்படுகிறார்கள். "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று அறிவிக்கிற இரட்சகருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைந்து புதுவருடத்தை எப்படி சரியாக ஆரம்பிப்பது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

இன்றைய பாடம் முழுவதும் உதவிகரமான வழிமுறைகள், நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடம். "தேவன் உலகத்தில் எவ்வளவாய் அன்பு கூர்ந்தார்" என்பதாகும். சிந்திக்கிற ஜனங்களுக்கு இதைக்காட்டிலும் கவரக்கூடிய செய்தி வேறு ஏதுமில்லை. கடந்த காலத்தில் தேவனுடைய அன்பை நாம் வலியுறுத்திக் கூறாததே சபைக்கும் உலகத்திற்கும் கஷ்டமாக இருந்தது. வேதாகமத்தின் தேவனிடமிருந்து நமது புரிந்துகொள்ளும் கண்களை நமது விசுவாச பிரமாணம் தவறாக வழி நடத்தும் போது எப்படி நாம் இதை செய்ய முடியும். இந்த விசுவாசப்பிரமாணம் பரம பிதாவை சாத்தானில் நிறத்தில் அதாவது மிகவும் அன்பற்றவராக, மிகவும் அநீதியுள்ளவராக, மானிடரைக் காட்டிலும் கொடூரமானவராக, நாம் அறிந்தேயிராத, நாம் கற்பனை செய்து பார்க்கவே முடியாத ஒரு பிசாசு போன்று சித்தரித்துக் காட்டியது! நாம் கிறிஸ்தவர்களாக இந்த பயங்கரமான சித்திரங்களை மறந்து விட்டு, இன்றைய பாடத்தின் விலையேறப்பெற்ற வேத வாக்கியங்களை நமது மனதிலே நிரப்பிக் கொள்ளுவது நமக்கு நல்லது.

ஆனால் நாம் இப்படியாக "பிசாசுகளின் உபதேசங்களுக்கு" (2தீமோத்தேயு 4:1)விலகியிருக்கும் போது, பரிசுத்த பவுல் அழைப்பது போல கிறிஸ்தவர்கள் இந்த மோசமான அவதூறான விசுவாச கோட்பாடுகளை இன்னும் உலகத்திறகு முன்பாக பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இது "எல்லா புத்திக்கும் மேலான தேவனுடைய அன்பின்" நீளம், அகலம், ஆழத்தின் ஒரு கணநேர பார்வையைக் கூட காண முடியாதபடி தடுக்கிறது. அதற்கு பதிலாக தேவ அநீதியான நீளம், அகலம் மற்றும் ஆழத்தை தவறாக சித்தரித்துக் காட்டுகின்றன. இப்படியாக நாம் உண்மையான தேவனை அவர்களது நண்பராக உணர முயற்சிக்க உதவுவதற்கு பதிலாக, நம்மை அறியாமலேயே உலகமானது தேவனை விட்டுவிலகும்படிசெய்கிறோம்.

ஆனால் தேவனுடைய ஜனங்கள் சத்தியத்துக்கு விழித்துக்கொண்டு அதை உறுதிப்படுத்தவும், "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கவும்" படிப்படியாக தைரியத்தை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். தெய்வீக குணலட்சணத்தின் நமது தெய்வ நிந்தனையை உலகமானது முழுவதுமாக நம்பி இருந்ததால், மகா சந்தோஷத்தின் செய்தியை, வேதாகமத்தின் கிருபையான செய்தியை நாம் அவர்களுக்கு கொண்டு வரும் போது, அதை அவர்கள் அபூர்வமாக விசுவாசிக்கிற கஷ்டத்தை நாம் சந்திக்கிறோம்.

### "அழியாதபடிக்கு"

நாம் கவனித்துக்கொண்டிருக்கிற வசனமானது கடந்த காலத்தின் நமது அடிமைத் தனத்தையும் குருட்டுத்தனத்தையும் விளக்கி, தேவனுடைய நீதியை நமக்கு சொல்லுகிறது. நம்மை நித்திய ஆக்கினையிலிருந்து காப்பாற்ற தேவன் தமது ஒரே பேறான குமாரனைத் தந்தார் என்று நாம் ஒரு காலத்தில் கருதியது போல அது கூறவில்லை. அதற்கு முற்றிலும் மாறாக, அவரது பணி நம்மை அழிந்து போவதிலிருந்து காப்பாற்றவே என்று அது அறிவிக்கிறது. அழிந்துபோவது எதைக் குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். புத்தியில்லா மிருகங்கள், அவைகள் மரிக்கும் போது அழிந்து போகின்றன. ஏனெனில் தேவன் அவைகளுக்கு உயிர்த்தெழுதலை ஏற்பாடு செய்யவில்லை. தேவனுடைய இரக்கமும் கிறிஸ்துவுக்குள்ளான ஏற்பாடும் இல்லாதிருந்தால், "நீங்கள் சாகவே சாவீர்கள்" என்ற மரண தண்டனைக்கு கீழாக இருந்த மனுக்குலம் நம்பிக்கையில்லாமல் புத்தியில்லாத மிருகங்களைப் போல அழிந்து போயிருப்பார்கள். மரண தண்டனைக்கு மீட்கும் பொருள் கொடுக்கவும், எல்லா மனிதரும் உயிர்த்தெழுதல் பெறவும் "கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்." "ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்."

இயேசுவின் மரணமில்லாதிருந்தால், நமது இனம் புத்தியில்லாத மிருகங்களைப் போல அழிந்து போயிருக்கும். அவரது மரணத்தினால் இப்போது விசுவாசத்தினால் தேவனுடன் இணக்கத்திற்கு வருகிற நீதிமான்கள் மாத்திரமல்ல, தேவனுடைய கிருபையையும் அதன் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தையும் காணும்படி அறிவின் கண்கள் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிற, தேவனைப்பற்றிய அறிவுக்கு இன்னும் வராதிருககிற அநீதிமான்களுக்கும் கூட உயிர்த்தெழுதல் இருக்கும். நாம் வாசிக்கிறதாவது: "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் (கிறிஸ்து இயேசு) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." "அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்."

மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், ஒரு எதிர்கால வாழ்க்கையின் நம்பிக்கை இராது. நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள் என்று பரிசுத்த பவுலே நமக்கு குறிப்பாக கூறுகிறார்.இயேசு நமது பாவங்களுக்காக மரித்து, பிதாவனவரால் மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுப்பப்பட்டதால் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், அவரது மீட்பின் இரத்தத்தால் கிரயத்துக்கு கொள்ளப்பட்டவர்களும் உலகத்தின் மனுக்குலம் முழுவதும் தேவனால் கொண்டு வரப்படுவார்கள் என்று அவர் குறிப்பிட்டு கூறுகிறார். ஆகையால் கிறிஸ்துவுக்குள் இல்லாத மற்றும் சபை நம்பிக்கை இல்லாத நமது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்காக கூட நாம் நம்பிக்கையற்றவர்களைப் போல துக்கப்பட வேண்டியதில்லை. (1கொரிந்தியர் 15ஐப் பார்க்கவும்)

### "மேன்மையான உயிர்த்தெழுதல்"

கனம், மகிமை, சாகாமைக்குரிய உன்னதமான உயிர்த்தெழுதல், சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டு, நேர்மையான இருதயத்தில் அழைப்பை ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு சுமையையும் ஒதுக்கி வைத்து விட்டு பரிசுக்காக

பொறுமையுடன் பந்தயத்தில் ஓடுகிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். இந்த பரிசுத்தவான்கள் ராஜரீக ஆசாரிய கூட்டத்தை அமைப்பார்கள் என்று இயேசு அறிவிக்கிறார். அவர்கள் ராஜரீக பிரதான ஆசாரியராகிய அவருடன் இணைந்து, அவரது ஆயிரவருட அரசாட்சியில், உலகத்தை பாவம் மற்றும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பி, உலகத்தை மறுசீரமைத்து, உலகத்தை ஆசீர்வதிக்கக்கூடிய வேலையில் ஈடுபடுவார்கள்.

கிறிஸ்துவுக்குள்ளான புதிதான ஜீவனில் தங்கள் இருதயத்தில் முன்னேறிய விசுவாசிகளில் தற்காலத்தில் சபையின் உயிர்த்தெழுதல் ஆரம்பிக்கிறது. (கொலோசேயர் 3:1) "அழிவுள்ளதாகிய இது அழியாமையை தரித்துக்கொள்ளும் போது" "ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படும்." "ஏனெனில் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை." (1கொரிந்தியர் 15:50)"

## "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ"

மீட்பராகிய கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவும் அவரது மீட்பின் இரத்தத்தில் விசுவாசமும், அவரது ஆலோசனைக்கு கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் தவிர வேறு யாரும் நித்திய ஜீவனை அடையாதபடிக்கு தெய்வீக திட்டம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையாக இருக்குமானால், புறஜாதியாரின் யாரும் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. இயேசு பூமிக்கு வருவதற்கு முன் வாழ்ந்தவர்கள் யாரும் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. இன்னும் திரளான ஜனங்களாகிய நமது நண்பர்கள், அண்டை வீட்டார் நமது சொந்த குடும்பங்கள் கூட இன்னும் இரட்சிக்கப்படவில்லை. ஏனெனில் இன்னும் அவர்கள் இரட்சகருடன் முக்கியமான உறவுக்குள் வரவில்லை. "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை." (1யோவான் 5:12; யோவான் 3:36)

இயேசு எல்லா மனுஷருக்காகவும் மரித்தார் என்றும் எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்றும் இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது என்றும் பரிசுத்த பவுல் கூறுகிறார். (1தீமோத்தேயு 2:5,6) இதற்குரிய சாட்சிக்கான தேவனுடைய ஏற்ற காலம் உலகிற்கு வெளியரங்கமாக இன்னும் வரவில்லை. இயேசு, "ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கும்" பொழுது சாட்சியம் ஆரம்பமானது. நாம் வாசிக்கிறதாவது: "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்ட இவ்வளவு பெரிதான இரட்சிப்பு." (எபிரேயர் 2:3,4)

அப்பொழுதிலிருந்து இங்கேயும் அங்கேயும் காதுள்ள சிலர் தேவனுடைய கிருபையையும் அவரது தெய்வீக பராமரிப்புகளையும் காண்கிறார்கள். இந்த வகுப்பாரை இயேசு வாழ்த்தி கூறுவதாவது: "உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்." மனுக்குலத்தில் திரளானவர்கள் காணவுமில்லை, கேட்கவுமில்லை. ஏனெனில், பரிசுத்த பவுல் கூறுவது போல, நமது கர்த்தராகிய இயேசுவின் முகத்திலுள்ள தேவனுடைய கிருபையின் மெய்யான ஒளியை அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாக இராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களது மனக்கண்களை குருடாக்கியிருக்கிறான். (2கொரிந்தியர் 4:4-6)

தேவன் இந்த குருட்டுத்தனத்தை அனுமதித்திருக்கிறார். ஆனால் அது சீக்கிரத்தில் முடிவுக்கு வரும் என்று அறிவிக்கிறார். மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட செல்வாக்கின் கீழ் சத்திய வெளிச்சம் எல்லா இடங்களிலும் பிரகாசிக்கும். அது மாத்திரமல்ல, "குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" என்றும் அவர் அறிவிக்கிறார். பலவீனமான உலகத்தின் பொருட்டு எப்படிப்பட்ட ஆசீர்வாதமான காட்சியை இது நமக்கு முன்பாக திறக்கிறது! தேவன் தமது சபைக்காக, சிறுமந்தைக்காக, பரிசுத்தவான்களுக்காக விசேஷித்த ஆசீர்வாதத்தையும் கிருபையையும் வைத்திருக்கிறார். ஆனால் அவர் உலகத்திற்காகவும், ஆசீர்வாதத்தை அது சபைக்கானதைக் காட்டிலும் மாறுபட்டதாக இருந்தாலும் வைத்திருக்கிறார் என்பதை நாம் இப்பொழுது தெரிந்து கொள்ளுகிறோம்.

தேவன் சபையை மட்டும் நேசிக்காதபடி, உலகத்தையும் நேசித்தார் என்று நமது வசனம் நமக்கு சொல்லுகிறது: அவர் சபையை மட்டும் இரட்சிக்கவில்லை. உலகத்தையும் இரட்சிக்கிறார். விசுவாசத்தின் மூலம் நித்திய ஜீவனை அடையும்படியான சந்தர்ப்பத்தை அனைவரும் பெறுவார்கள். எனினும் உலகத்திற்காக வைத்திருக்கிற ஜீவன், வேதாகமத்தின்படி, சபைக்கு கொடுக்கப்படுகிறதைக் காட்டிலும் மிகவும் வேறானதாக இருக்கிறது. சபையானது தெய்வீக தளத்தில் ஜீவனைப் பெற்று தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுவார்கள். அவர்கள் ஆண்டவரின் கனம், மகிமை, சாகாமையில் பங்கு பெறுவார்கள். உலகமானது மேசியாவின் ராஜ்யத்தில் கீழ்ப்படிதலினாலும், விசுவாசத்தினாலும் ஆதாம் இழந்ததும், இயேசுவினால் கல்வாரியில் ;உலகத்திற்கு மீட்கப்பட்டதுமான பூமிக்குரிய மற்றும் பூரண ஜீவனை மறுபடியும் பெறும்படி சலுகை பெறுவார்கள்.

ஜீவனை அளிப்பவருடன் கீழ்ப்படிதலுடனும் விருப்பத்துடனும் உறவுக்குள் வருகிறவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள். இந்த ஜீவன் பிதாவாகிய ஆதாமுக்கு நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டு, கீழ்ப்படியாமையினால் இழந்து போனது. எனினும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய இந்த கிருபையை மறுதலித்து, கிறிஸ்துவுடன் முக்கியமான இணைப்புக்குள் வருவதில் தோல்வியடைகிறவர்கள் அழிந்து போவார்கள். ஆனால் அவர்கள் முதலாவது அல்லது ஆதாமிய மரணத்தினால் அழிந்து போக மாட்டார்கள். ஏனெனில் இதிலிருந்து அனைவரும் ஆண்டவரினால் மீட்கப்பட்டு தப்புவிக்கப்பட்டார்கள். வேண்டுமென்றே செய்த அவர்களது சொந்த பாவங்களுக்காக இரண்டாம் மரணத்தில் அழிந்து போவார்கள். ஏனெனில் அதிலிருந்து மீட்படைய நம்பிக்கை இராது. "ஏனெனில் இனி கிறிஸ்து மரிக்கமாட்டார்." இரண்டாம் மரணத்திலிருந்து யாரும் மீட்கப்படமாட்டார்கள்.

R5355

# A RACE OF SLAVES
# அடிமைகளின் இனம்

"நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்."– ரோமர் 7:14

நாம் பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டோம் என்ற அப்போஸ்தலரின் கூற்றுப்படி நாம் அடிமைகளின் இனமாக இருக்கிறோம். மனுக்குலம் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறது என்று வேறு இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ரோமர் 6:16, 17) நாம் எப்பொழுது அடிமைகளானோம் மற்றும் இந்த நிலைமை எப்பொழுது வந்தது என்று நாம் காண பின்னுக்கு பார்க்கிறோம். ஆதாம் தன்னை விற்றுவிட்டார், அதனிமித்தம் அவரது இனம் முழுவதையும் விற்றுவிட்டார். வாங்கினவர் என்ன விலைகொடுத்தார்? ஆதாம் தன்னையும் தனது சந்ததியினரையும் பாவத்துக்கு கீழாக விற்றபோது ஆதாமுக்கு என்ன கிடைத்தது? அவர் தமது சுய விருப்பத்தை பெற்றார் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவரது கீழ்ப்படியாமையின் கொஞ்ச காலம் தமது மனைவியின் ஐக்கியத்தை தெரிவு செய்து, இப்படியாக தேவனையும் அவரது சித்தம் மற்றும் அவரது பிரமாணத்தையும் நிராகரித்தார். இந்த விலைக்காக, சுய திருப்திக்காக, இந்த சந்தோஷத்திற்காக தன்னையே பாவத்திற்கு விற்றுப்போட்டு தேவனுடைய பிள்ளையாக இருப்பதிலிருந்து துண்டிக்கப்பட்டார். பிறகு அவர் பாவத்திற்கு அடிமையாகி, அதன் பலனாக மரணத்திற்கு அடிமையானார். (ரோமர் 5:12)

உலகத்தை ஆளுகின்ற ஏகாதிபதியாகிய பாவம் முழு மனுக்குலத்தையும் அடிமைப்படுத்தியிருக்கிறது. இந்த அடிமைத்தனத்திலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. பாவத்தின் இந்த அடிமைத்தனத்தின் கீழ் அவர்கள் வியாதி, துக்கம், ஏமாற்றம் மற்றும் மரணத்தை பெறுகிறார்கள். இந்த மகா சாம்ராஜ்யத்தில்மரணமே மிகவும் உச்சக்கட்டமாக இருக்கிறது. "பாவத்தின் சம்பளம் மரணம் என்று நாம் வாசிக்கிறோம். "சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது." (ரோமர் 6:23; 8:22) அவர்கள் அனைவரும் இந்த அடிமைத்தனத்தில் பயணிக்கிறார்கள். இது இஸ்ரயேலர்கள் எகிப்தில் பார்வோனின் கீழ் பெற்ற அடக்குமுறையினால் சித்தரித்துக் காட்டப்பட்டது. சர்வ உலகமும் தேவனிடமிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டு, அவரது தயவு மற்றும் நித்திய ஜீவனிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறது.

அடிமைகளை திரும்ப வாங்குவதற்காக ஒரு மீட்கும் பொருளை கொடுப்பார் என்பதே தேவனுடைய வாக்குத்தத்தமாக இருந்தது. மீட்பரைக் கொடுத்து இதை ஏற்ற காலத்தில் செய்தார். தகப்பனாகிய ஆதாம் தனது சொந்த மீறுதலினாலே அடிமைத்தனத்திற்குள் சென்றார். அவரது பிள்ளைகளாகிய சகல மனுக்குலமும் அடிமைகளாக பிறந்து, மரண தண்டனைக்கு கீழாக பாவத்திலும், அடிமைத்தனத்திலும் பிறந்தார்கள். கிறிஸ்து தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்காக தமது ஜீவனை, ஒரு சரியான விலைக்கிரயத்தை, ஒரு மீட்கும் பொருளின் விலையை கொடுக்க பாவம் செய்தவர்களை மீட்கும்படி தோன்றினார். சகல இந்த அடிமைகளும் பிறகு விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் விரும்பினால் முழுமையான விடுதலையை அடையலாம் குமாரன் விடுதலையாக்கும் சகலமும் மெய்யாகவே விடுதலையாவார்கள்.

### மனிதனின் விடுதலை நிழலில் சித்தரிக்கப்பட்டது

பாவம் மற்றும் மரணத்திலிருந்து அடிமைகளின் இந்த விடுதலை நியாயப்பிரமாணத்தில் ஐம்பதாவது வருட யூபிலியின் விடுதலையின் மூலம் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டது. யூபிலி வந்த போது அடிமைத்தனத்தை விட்டு விடுதலை அடைய விரும்பாதவர்கள் மட்டும் தான் அடிமைகளாக இருக்கலாம். (உபாகமம் 15:12-17; லேவியராகமம்25:39-41) கிறிஸ்துவின் ஆளுகையின் ஆயிர வருடம் யுகம் தான் மகா யூபிலியாக இருக்கும். அதில் சகல அடிமைகளும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் சாத்தானின் அதிகாரத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, அவர்கள் விரும்பினால் சுதந்திரத்துக்கு உயர்த்தப்படுவார்கள். சட்டப்படி அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவது ஒரு காரியம். அவர்களது சலுகைகளை திரும்பப்பெறுவது இன்னொரு காரியம். மனுக்குலம் நீதியின்படி விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் அனைவரும் ஒரு விலைக் கொடுத்து வாங்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் பாவத்தின் அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்டு மகிமையின் மகா ராஜாவாகிய இயேசு கிறிஸ்து என்னும் புதிய ஆண்டவரின் கீழ் வைக்கப்படுவார்கள்.

மேசியாவின் ஆளுகை மனுக்குலம் உயர்த்தப்படக் கூடிய ஒன்றாக இருக்கும். இழந்து போனவைகள் அனைத்தும் ஆயிர வருடத்தில் மீட்கப்படும். அடிமைத்தனத்தை விரும்புகிறவர்களைத் தவிர மற்ற அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். அடிமைத்தனத்தை விரும்புகிறவர்கள் இரண்டாம் மரணத்துக்குப் போவார்கள். அவர் மறுபடியும் உயிர்தெழுந்து நித்திய ஜீவனை அடைய முடியாது அல்லது தேவனுடைய குடும்பத்தில் இருக்க முடியாது.

### மனுக்குலத்தின் தற்கால எஜமான்

பாவம் நமது இனத்தின் சொந்தமாகிவிட்டது. நாம் அதன் கட்டுப்பாட்டில் வந்துவிட்டோம். பாவமானது மனுக்குலத்தை தொடர்ந்து ஆட்சி செய்யக்கூடிய ஒரு பெரிய சக்கரவர்த்தியாக உருவகமாக சொல்லப்படுகிறது. பாவத்திற்கு சாத்தான் என்பது மற்றொரு பெயர். நமது கர்த்தர் அவனை, பொய்க்கு பிதாவாயிருக்கிறான் என்றும் "ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகன்" என்றும் கூறுவது போல அவன் பாவத்திற்கும் சகல அநீதிக்கும் பிரதிநிதியாக மிகவும் சரியாக நிற்கிறான். (யோவான் 8:44)

மனுக்குலமானது ஏற்றக்காலத்தில் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும்படியாக இயேசு கிறிஸ்து எல்லாருக்காகவும் மீட்கும் பொருளைக் கொடுத்தார். ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட தெய்வீக தண்டனை மரணமாகும். பாவமே அதற்கு வழியாக இருந்து

அதனிமித்தமே இந்த தண்டனை வந்தது. கிறிஸ்து "நமக்காக பாவமாக்கப்பட்டார்." (2கொரிந்தியர 5:21) அதாவது அவர் பாவியாக கருதப்பட்டு, பாவி பெற வேண்டிய தண்டனையை அவர் பெற்றுக்கொண்டார். நாம் இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படும்படியாக அவர் அப்படிச் செய்தார். முடிவாக சகல சிருஷ்டிகளும் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாக ஆவார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறார். (ரோமர் 8:20.21)

ஆதாம் சுய திருப்திக்கு ஆளாக்கப்பட்ட போது, இந்த மரண தண்டனைக்கு கீழானார். இந்த தண்டனையை கொடுத்தவர் தேவன். தேவனுடைய தண்டனை சந்திக்கப்பட வேண்டும். ஆதாமின் மேல் வந்த இந்த தண்டனை சந்திப்பதற்கு கிறிஸ்து தமது சகல சுய திருப்தியையும் கைவிட்டு, பிதாவானவரின் சித்தத்தை செய்ய மரிக்க வேண்டியிருந்தது. "புத்தகத்தில் எழுதியிருக்கிற" தேவனுடைய எல்லா சித்தத்திற்கும் தம்மை சந்தோஷமாக ஒப்புக்கொடுத்தார்.

தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிற நாம் கிறிஸ்து மூலம் வந்திருக்கிறோம். தன்னிச்சையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியர்களாகி இன்னும் அடிமைத் தனத்துள்ளாகத்தான் இருக்கிறோம். ஆனால் இது பாவத்துக்குள்ளான அடிமைத்தனம் அல்ல, கிறிஸ்துவுக்குள்ளான அடிமைத்தனம் ஆகும். உலகமோ கிறிஸ்துவுக்கு அடிமைகளாயிராமல் பாவத்துக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். கிறிஸ்துவினால் நாம் பாவத்திலிருந்து விடுபட, நாம் நமது சித்தத்தை முற்றிலுமாக அவரிடம் விட்டுவிட வேண்டும் என்று பிதாவானவர் விரும்புகிறார். இது முழுமையான அர்த்தத்தில் நம்மை அடிமையாக்குகிறது. சித்தத்தை முழுமையாக ஒப்புக்கொடுப்பதே மிகவும் முழுமையான அடிமைத்தனம். நமது அடிமைத்தனம் அப்படிப்பட்டது. ஆனால் அது பிரயோஜனமுள்ள ஒன்றாக இருக்கிறது. நாம் புசித்தாலும் அல்லது குடித்தாலும் அல்லது உறங்கினலும் அல்லது வேலை செய்தாலும் நாம் என்ன செய்தாலும் கர்த்தருடைய சித்தத்திற்கு இணக்கமாகவும் அவரது மகிமைக்காகவும் செய்ய வேண்டும். ஆம், நம்முடையது மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட அடிமைத்தனம். எந்த ஒரு சலுகையினாலும் நாம் அதிலிருந்து விடுதலையடைய மாட்டோம்.

நாம் நமது சித்தத்தை முழுமையாக தேவனிடம் அர்ப்பணம் செய்யாமல், நமது இரட்சகரோடு அவரது கனம், மகிமை மற்றும் சாகாமையில் உடன் சுதந்தரராக இருப்பதற்கு, வரக்கூடிய மகிமையான காரியங்களுக்கு நாம் தயார்படுத்தப்படக்கூடியவர்களாக இருக்க மாட்டோம் என்பதை நாம் காண்கிறோம். ஆகையால் கிறிஸ்துவுக்கு கொத்தடிமை ஊழியர்களாவதற்கு பாவத்தின் ஊழியத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம். பாவத்திலிருந்து விடுதலையாவதை நாம் உணர்வதினால், நாம் மெய்யாகவே விடுதலையாகிறோம்.(யோவான் 8:36)

நாம் ஜீவிக்கும் வரையில் நமது சரீரத்தில் இன்னும் கொஞ்ச அளவுக்கு பாவத்திற்கு அடிமையாயிருக்கிறோம் என்பது உண்மை. "சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்று வலியுறுத்துகிறார். உங்களை பாவம் ஆதிக்கம் செலுத்த அனுமதியாதீர்கள். பாவத்திற்கு கீழ்ப்படிய மறுத்து விடுங்கள். (ரோமர் 6:12) ஆகையால் நாமே முயற்சிக்க வேண்டும். முயற்சிக்காதவர்கள் பாவத்தின் கொத்தடிமையாக இருப்பார்கள். பழைய எஜமானனை, பாவத்தின் முயற்சிகள் நம்மை மறுபடியும் அடிமைத்தனத்திற்குள் கொண்டு வருவதை நாம் விடாப்பிடியாக உறுதியுடன் எதிர்க்க வேண்டும். கிறிஸ்து நம்மை விடுதலையாக்கின சுதந்திரத்தை பராமரிக்க நாம் முயற்சிக்க வேண்டும். (கலாத்தியர் 5:1) இந்த காரியத்தில் நாம் அ ரை மனதுடன் இருந்தால், நாம் ஓரளவுக்கே உண்மையுள்ளவர்களாயிருந்து பரிசை ஜெயங்கொள்வதி -லிருந்து நாம் தோல்வியடைவோம். நாம் எழும்ப வேண்டும். நாம் முழுவதும் உண்மையுள்ளவ -களாயிருந்தால் அவரது கிருபை நமக்கு போதுமானதாக இருக்கிறது. இந்த விசுவாசம் நமக்கு எந்த அளவுக்கு சுயத்தை வெறுத்தலையும் பலியையும் கொண்டு வருகிறதோ அதைக் காட்டிலும் அதிகமாக அவர் நமக்கு ஈடுகட்டுவார்.

### "உலகத்தின் பாவம்"

ஆதாமின் பாவமே உலகத்தின் பாவமாக இருந்தது. ஆதி பாவம் கீழ்ப்படியாமையாக இருந்தது.இந்த கீழ்ப்படியாமை பாவமானது உலகத்தை உடைமையாக்கிக் கொண்ட செயலை மட்டும் உள்ளடக்காமல் அதிலிருந்து உடைமையை பற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால் அதன் தண்டனைக்குள் சகலத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. ஆகையால் "உலகத்தின் பாவத்தை" சுமந்து தீர்க்க இயேசு உலகத்தில் வந்தார். (யோவான் 1:29) அவர் தமது ஜீவனைக் கொடுத்து, ஆதாமுக்காக சரிசமமான விலைக்கிரயமாக தமது ஜீவனைக் கொடுத்து, பாவத்திலிருந்து விடுதலையை சாத்தியமாக்கினார்.

ஆதாம் பாவம் செய்த அந்த கனத்திலிருந்து பாவம் ஆதாமை உடைமையாக்கிக் கொண்டது. அவர் பாவத்திற்கு கீழ்ப்படிந்தவுடனேயே அவர் பாவத்தின் அடிமையானார். இங்கே நீதி மற்றும் பாவம் என்கிற இரண்டு கொள்கைகள் காண்பிக்கப்படுகிறது. பாவமானது தூண்டுதல் செய்து கூறியதாவது: இந்த மார்க்கத்தை கடைபிடி; இந்த யோசனைக்கு ஆதாம் இணங்கியவுடன் அவர் பாவத்தின் அடிமையானார். தேவன் தண்டனையை கொடுத்தார். ஆதாம் தன்னிச்சையாக பவாத்தின் ஊழியனான போது தேவன் ஒன்றும் செய்யவில்லை என்று வேதம் குறிப்பிடுகிறது.

### நன்மை மற்றும் தீமையின் கொள்கைகள் நித்தியமானவைகள்

நன்மை மற்றும் தீமையின் மாபெரும் கொள்கைகள், அவைகள் செயல்பாட்டில் இருந்தாலும் இல்லாதிருந்தாலும் அவைகள் இருக்கவே செய்கின்றன. நீதியானது எப்பொழுதுமே இருக்கிறது. எப்பொழுதுமே நீதியின் கொள்கையும் இருக்கிறது, அநீதியின்

கொள்கையும் இருக்கிறது. தேவ சாயலில் ஜீவிகள் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்தே தீய மார்க்கம் எப்பொழுதும் திறந்தே இருக்கிறது. சாத்தான் தான் செய்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தவறான மார்க்கத்தை எடுத்திருப்பான். மனுக்குலமானது, அவர்கள் தேர்ந்தெடுக்க விரும்பினால் பாவம் செய்யக்கூடிய சலுகை எப்பொழுதும் திறந்தே இருக்கும். ஆனால் பாவத்தின் சம்பளம் என்ன என்பதை தேவன் முழுமையாக போதிப்பார். மனுக்குலமும் சகல அறிவுள்ள ஜீவிகளும் அந்த பாடத்தை முழுமையாக கற்றுக்கொள்ளுவார்கள். அவர்கள் தவறான மார்க்கத்தை எடுக்கவோ, அதை நேசிக்கவோ மாட்டார்கள். அது தற்கொலையாக இருக்கும் என்பதை அறிவார்கள். எப்படி தேவன் தவறானதை தேர்ந்தெடுக்க மாட்டாரோ அது போல அவர்கள் தவறானதை தேர்ந்தெடுக்கமாட்டார்கள். அனைவரும் "நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கவும்" கற்றுக்கொண்டிருப்பார்கள்.

ஆனால் இந்த இரு கொள்கைகளும் தொடர்ந்து இருக்கும். ஒன்றை செய்வது சரியாக இருந்தால், மற்றதை செய்வது தவறாக இருக்கும். தேவனுடைய நீதியான ஏற்பாடு என்னவென்றால் நீதியின் கொள்கைகளுக்கு கீழ்ப்படிகிற அனைவரும் நித்தியமாக ஜீவிப்பார்கள். ஒருவன் நீதியின் மார்க்கத்தை விட்டு அலைந்தால், நீதியானது அவனை தண்டிக்கும். பாவத்தின் உறுதியான விளைவுகள் பாவியின்மேல் விழும். இது ஒரு பரந்த கொள்கை. "பாவத்தின் சம்பளம் மரணம்," நீதியின் சம்பளம் நித்திய ஜீவன். கண்டிப்புடன் சொல்லுவோமானால் நித்திய ஜீவன் ஒரு கிருபை வரம். அதை யாரும் சம்பாதிக்க முடியாது. "தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்."

### விற்கும் விலையும் வாங்கும் விலையும்

ஆதாம் பாவம் செய்த போது, தனது ஜீவனை விற்றார். ஆதாம் இந்த பாவத்தை செய்தது அறியாமல் அல்ல என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். அவர் பாவம் செய்தால் அதற்கான தண்டனை மரணம் என்பதை அவர் அறிவார். ஆகையால் அவர் விலக்கப்பட்ட கனியை புசித்த போது, அவரது ஜீவனை விற்கிறார் என்பதை அறிந்திருந்தார். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் ஒரு ஆப்பிளுக்காக தனது ஜீவனைக் கொடுத்தார். இன்னும் சொல்லப்போனால் ஸ்தீரிக்காக அவர் ஆப்பிளை புசித்தார். ஆகையால் தனது சுயதிருப்திக்காக தனது ஜீவனை விலையாகக் கொடுத்தார். ஆப்பிளை புசித்ததின் பலனாக வேண்டுமென்றே மரண தண்டனைக்கு கீழாக, பாவத்தின் அடிமைத்தனத்துக்குள் வந்தார். ஏனெனில் தண்டனையை அவர் அறிவார். ஒரு ஆப்பிளுக்காக தனது ஜீவனை விலையாகக் கொடுத்தார் என்று நாம் பார்க்கிறோம். வாங்கும் விலை, சரிசமான விலை, மானிட ஜீவனைக் கொடுப்பது ஆகும்.

தெய்வீக திட்டம் என்பது பல்வேறு கோணங்களில் பார்க்கிற ஒரு பெரிய கட்டத்தைப் போல இருக்கிறது. வாங்குவதை மற்றும் விற்பதைக்காட்டிலும் பல்வேறு படங்களை நாம் எடுக்கலாம். ஆனால் இந்த விளக்கம் நமது சிந்தைக்கு மிகவும் பொருந்துகிறது.

மீட்கும் பொருள்தான் இந்த திட்டத்திற்கு அடிப்படை, வேதாகமத்தில் தெய்வீக திட்டத்தின் வேறு எந்த அம்சமும் மிகவும் சரியாக வைக்கப்படவில்லை. மீட்கும் பொருளைத் தவிர வேறு எந்த அம்சமும் வெளிப்படையாகவோ அல்லது நுணுக்கமாகவோ எதிராக போராடவில்லை. ஆதாமுக்கான மீட்கும் பொருளின் விலைக்கிரயம் நீதியிடம் கொடுக்கப்பட வேண்டும். மனுக்குலமானது மரண தண்டனைக்குட்பட வேண்டும் என்று கூறுகிறது. இயேசுவே இந்த கோரிக்கையை சந்தித்தார். நீதியானது, விலைக்கிரயத்தைக் கொடு, மனுக்குலத்தை விடுதலை செய்கிறேன் என்று கூறுகிறது. நீதியின் கைகள் எப்பொழுதுமே நிறைவாய் இருக்க வேண்டும். அதன் பிடியிலிருந்து போகவே கூடாது. விலைக்கிரயம் கொடுக்கப்படும் வரை தண்டனையானது நிற்கும்.

பாவம்என்பது ஒரு ஆளல்ல. அது ஆளுமைப்படுத்தப் பட்ட ஒரு தீய கொள்கை மட்டுமே. அது சில சமயம் ஒரு நபராக இருக்கும். சாத்தானுக்கு ஒப்பாக பயன்படுத்தப்படுகிறது. மனிதன் தன்னையே பாவத்துக்கு விற்றான். நீதியானது அவனை விற்கவில்லை. நீதியானது இந்த பரிவர்த்தனையை, விற்பனையை அங்கீகரித்தது. இதன் மூலம் தண்டனையின் கீழ் பாவமானது மனிதனின் மேல் ஆளுகையை பெற்றது. ஆனால் தெய்வீக அன்பு உள்ளே நுழைந்துபாவிக்கான விலைக்கிரயத்தைக் கொடுத்தது. பாவத்திற்கு கீழாக விற்கப்பட்டவர்கள் எல்லாம் மீட்கப்படுவார்கள் அல்லது பாவம் மற்றும் மரணத்திடமிருந்து திரும்ப வாங்கப்படுவார்கள் இந்த பரிமாற்றம் கிறிஸ்து மூலம் மட்டுமே செய்யப்பட முடியும். அவர் வாங்குகிறவரும் மத்தியஸ்தருமாய் இருக்கிறார். அவர் ஏற்ற காலத்தில், அனைவரையும் பாவம் மற்றும் மரணத்தின் தண்டனையிலிருந்து உயர்த்தி, நீதி மற்றும் ஜீவனின் ராஜ்யத்தில் அவர்களை வைப்பார். இயேசு தமது பலியின் புண்ணியத்தின் மூலம் மனுக்குலத்திற்கு ஜீவனை திரும்பியளிக்கும் சலுகையை அளிக்க நீதியானது நின்று உடன்படும்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**